பக்கங்கள்-16 | தை 12,2014 | விலை-30.00

விளம்பரங்கள்
அனைத்துவகையான
விளம்பரங்களையும்
பிரசுரிக்க
நாடுங்கள்...
தினப்புயல்
154, 6ம் ஒழுங்கை,
தேக்கவத்தை,
வவுனியா.

நடுநிலை இதழ்

# தினப்புயல்

THINAPPUYAL
තිනප්පුයල්

REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06

அன்பான வாசக நெஞ்சங்களே
எமது
தினப்புயல் பத்திரிகை
தொடர்பான அனைத்து
விமர்சனங்களையும்,
ஆக்கங்களையும்
வரவேற்கின்றோம்.

மலர்-01 | Tel&Fax:- 0242227558, Hot line: 0711850885 Email:tthinappuyalnews@yahoo.com | இதழ் - 67




email : vanni_inn@yahoo.com
Vanni Inn
Chinese, Indian, Sri Lankan Food available



HOTEL VANNI INN



A/C Room, Non A/C Room, Com Room
Quality Foods, Hall, Vachel Parking


2nd Cross Street, Vavuniya.

Tel : 024 2222074 , Fax : 024 2222074

# பிரபாகரனின் இறப்புத் தொடர்பில் உலகநாடுகள் சந்தேகம்

தமிழ்மக்களுடைய பிரச்சினை இன்று சர்வதேச மட்டத்துக்கு செல்லுமளவுக்கு இன்று நிலமை மாறியுள்ளது. ஈழப்போரின் இறுதிக்கட்டத்தில் ஒரு இலட்சத்து நாற்பதாயிரம் பேருக்குமேல் கொல்லப்பட்டதாக சர்வதேச அறிக்கைகள் சுட்டிக்காட்டுகின்றன. இதன் காரணமாக முப்பது வருட ஆயுதப் போராட்டம் இலங்கையரசினால் முடிவுக்கு கொண்டு வரப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

விடுதலைப்புலிகளின் முக்கிய



தளபதிகளாகக் கருதப்பட்ட பால்ராஜ், சொர்ணம், தமிழ்ச்செல்வன், ஜெயம், பதுமன், தீபன், பொட்டு அம்மான், கடாபி, நாகேஸ் போன்றவர்கள் விடுதலைப்புலிகளின் கட்டமைப்பை சீர்குலைக்காது 2007வரை நடத்திச் சென்றனர். அதற்கு முன்னர் இலங்கையரசுடனான சமாதான ஒப்பந்த காலகட்டத்தில் இலங்கையரசின் புலனாய்வு பிரிவினரால் உள்வாங்கப்பட்ட ஒருசில தளபதிகளும் மேற்குறிப்பிடப்பட்ட தளபதிகளுள் உள்ளடக்கப்படுகின்றனர். ஏற்கனவே கருணா அம்மான் தற்போதைய அரசதரப்பு அரசியல்வாதியான விநாயகமூர்த்தி முரளிதரன் பிரபாகரனின் நம்பிக்கைக்குப் பாத்திரமானவராகத் திகழ்ந்து வந்த காலகட்டத்தில் பிரபாகரனின் இருப்பிடத்தை அணுகுவதென்பது கடினமான ஒன்றாகவே இருந்து வந்தது. விடுதலைப்புலிகளின் ஆரம்பகட்ட தாக்குதல்களின் வலிமைமிக்க ஒரு வீரனாகக் கருணா செயற்பட்டு வந்தார். கருணா, பால்ராஜ் என்று சொன்னாலே இலங்கை இராணுவமும் அதன் கட்டமைப்புக்கள் அனைத்தும் ஆட்டம் காணும் அளவுக்கு இவர்களது செயற்பாடுகள் இருந்து வந்தன.

அதன்பின் பல மாற்றங்கள் நிகழ்ந்து அவற்றைக் கடந்து வந்திருக்கிறோம். உண்மையில் இறுதிப் போரில் நடந்தது என்ன? வன்னியுடனான நில ஆக்கிரமிப்புச் சமரை ஆரம்பித்த சிங்கள அரசு மணலாறு, நெடுங்கேணி போன்ற பல முன்னரங்குகளுடாக களமுனையை நெருங்கியது. அங்கு என்ன நடந்தது? விடுதலைப்புலிகளினுடைய தாக்குதல் எப்படி இருந்தது? இதற்கு இலங்கை இராணுவம் என்ன விலை கொடுத்தது? போன்ற கேள்விகளுக்கான பதில் வெளிவராத இரகசியங்களாக இன்னும் மறைக்கப்பட்டுள்ளன. இதற்காக பத்திரிகை தணிக்கை, வன்முறை போன்ற சர்வதேச சட்டதிட்டங்களை மீறிய செயற்பாடுகளை இலங்கை அரசு திட்டமிட்டபடி மேற்கொண்டிருந்தது.

மன்னாரில் ஏற்பட்டிருந்த நில ஆக்கிரமிப்புக்கு எதிராக தளபதி பால்ராஜ் தலைமையில் ஒரு அணி தயாராகி கட்டுக்கரை குளத்தருகே இலங்கை இராணுவம் வழிமறிக்கப்பட்டு ஒரு தாக்குதல் நடத்தப்பட்டது. இதில் நூற்றுக்கணக்கான சிங்கள இராணுவத்தினர் இறந்ததுடன் ஆயிரக்கணக்கானோர் காயமுற்று அவ்விடத்திலிருந்து அப்புறப் படுத்தப்பட்டனர். அடுத்து மன்னார் தம்பனையிலிருந்து பண்டிவிரிச்சான் ஊடாக மடுமாதா தேவாலயம் நோக்கி சென்ற ஆக்கிரமிப்புப்படையை பால்ராஜ் தலைமையிலான அணியினரின் முறியடிப்புச் சமரில் ஏராளமானோர் கொல்லப்பட்டும், காயப்பட்டும் களத்திலிருந்து அவசரமாக அகற்றப்பட்டனர்.

இக்காலத்தில் தளபதி பால்ராஜ் சுகயீனம் காரணமாக இறந்துபோனார். இவ்விழப்பு தமிழ்மக்கள் மத்தியில் சிறு இழப்பை ஏற்படுத்தியிருந்தாலும் கூட மறுபுறம் மணலாற்றில் பாரிய சமர் வெடித்திருந்தது. இதில் மூத்த தளபதியான ஜெயம் தலைமையில் முறியடிப்புச் சமர் மேற்கொள்ளப்பட்டது. இந்த மணலாற்று சமர்க்களம் வித்தியாசமான ஒன்று. கொக்குதொடுவாய், தந்திரிமலை ஆகியவற்றிலிருந்து நிலஆக்கிரமிப்பை இலங்கைப்படைகள் ஆரம்பித்திருந்தன. மணலாறு என்பது காடுகளால் நிறைந்த பகுதி. வடகிழக்கை இணைக்கும் இதயபூமி என்றும் இதனை அழைப்பார்கள். வடகிழக்கு இணைப்பை தடுக்கும் வகையில் காலங்காலமாக சிங்கள அரசு சிங்களக் குடியேற்றங்களை அங்கு திட்டமிட்டு நடைமுறைப்படுத்தி வருகிறது.

இந்தக் களமுனையில் இலங்கையில் புதிதாக அமைக்கப்பட்ட 57ஆவது படையணி களமிறக்கப்பட்டபோதும் அதில் பல இழப்புக்களை சந்தித்தது. மிக உக்கிரமாக நடந்த அந்தச் சமரில் ஆதி, சீலன் போன்ற முக்கிய தளபதிகள் களமிறக்கப்பட்டு இச்சமர் முறியடிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தாலும் இதில் ஆதி, சீலன் போன்றவர்கள் வீரகாவியம் அடைந்தனர்.

அடுத்து வவுனியாவில் பல அழிவுகளை இலங்கைப் படைகளுக்கு ஏற்படுத்திய களமாக பாலமோட்டை களம் அமைந்திருந்தது. தளபதி பாப்பா தலைமையிலான விசேடதாக்குதல் மற்றும் முறியடிப்பு படையணிகள் விசேட தாக்குதலை நடத்தின. கிளிநொச்சி கைவிடப்படும் வரையில் இலங்கைப் படைகளுக்குவயிற்றில்புளியைக்கரைக்கச் செய்த படைகள் இவை. வடமுனையில் தீபன் தலைமையிலான சிறப்புத் தாக்குதல் படையணி களமிறக்கப்பட்டிருந்தது. அங்கு 2, 3 ஆக்கிரமிப்புக்களில் சிங்கள இராணுவம் ஈடுபட்டிருந்தது. ஆனால் அது அவர்களின்புதைகுழிநடவடிக்கையாகவே மாறிப்போனது. மன்னாரிலிருந்து அக்கராயன்வழியாகபுலிகளை அண்மித்த இராணுவ அணிக்கு எதிராக உக்கிர சமர் வெடித்தது. அவ்விடத்திலிருந்து ஒரு அடியேனும் முன்வைக்காது அவ்வணி நிர்மூலமாக்கப்பட்டது. இந்தியாவின் திட்டமிடல், பாகிஸ்தானின் பயிற்சி, சீனாவின் ஆயுதம் எதுவுமே பயனற்றுப்போனது. **அப்போது இந்தியாவினால் இரசாயன ஆயுதங்கள் இலங்கைக்கு வரவழைக்கப்பட்டது.** அவை உலகினாலும், ஐ.நாவினாலும் தடைசெய்யப்பட்ட கொடூரமான ஆயுதமாகும். அக்கராயன் குளத்தில் விடுதலைப்புலிகள் இரசாயன வாயுவை பயன்படுத்திய ஆயுதங்களை தம்மீது பிரயோகித்தன என்று அரசாங்கம் ஏற்கனவே கூறிவந்த நிலையில் இலங்கைப் படைகள் இந்தியாவிடமிருந்து இரசாயன ஆயுதங்களைப் பெற்றுப் பயன்படுத்தின.

இதன்மூலம் அக்கராயன்குளம், வெள்ளாண்குளம் தடைகளை உடைத்து ஆக்கிரமிப்பின் அடுத்தகட்டமாக பூநகரி, மற்றும் குடவரட்டி பாலம் ஆகியவற்றை தொடர்ந்து இராணுவ ஆக்கிரமிப்புக்குள் கொண்டு வரப்பட்டது. அத்துடன் கிளிநொச்சியின் எல்லையையும் இலங்கைப் படைகள் அண்மித்தன. அப்போது புலிகளின் தலைமை என்ன முடிவை எடுத்தார்கள்? தலைவர் முக்கிய தளபதிகளை அழைத்து புதுக்குடியிருப்பில்




ஆலோசனை ஒன்றை நடத்தினார். அதில் தலைவர் சொன்னது இதுதான். **"நாங்கள் போராடிக்கொண்டிருப்பது சிறிலங்காப் படைகளுடன் மட்டுமல்ல. உலகத்தின் பல நாடுகளுடன் நாம் போராடிக் கொண்டிருக்கிறோம். நாம் ஆறு நாடுகளுடன் போரிட்டோம். அதில் வெற்றியும் பெற்றோம். இப்பொழுது இது மூன்று மடங்காகிவிட்டது. இது தர்ம யுத்தமல்ல. அதர்மத்தின் யுத்தம். உலக வல்லாதிக்கத்தின் அரக்கத்தனமான போருக்குள் நாங்கள் அகப்பட்டிருக்கிறோம். போராட்டத்தை பாதுகாக்க வேண்டிய தேவை எமக்கு ஏற்பட்டிருக்கிறது. நிலங்களையும் சில வளங்களையும் நாம் இழக்க நேரிடும். ஆனால் எமது இலட்சியத்தையும், மக்களையும் இழக்க முடியாது. ஆகவே இப்போது எடுக்கும் தீர்மானம்தான் எமது விடுதலைப் போராட்டத்தை அடுத்த அத்தியாயத்துக்குள் இட்டுச்செல்லும். நான் சாகலாம் ஆனால் நாங்கள் சாகக்கூடாது. என்ற தத்துவத்தின்படி முடிவுகள் வகுக்கப்பட்டன. எமக்குத் தேவையான வளங்களுடன் போராளிகள் இராணுவநிலைகளை தக்கசமயம் வரும்போது ஊடறுத்து இராணுவத்துக்கு பின்பக்கமாகச் செல்லட்டும். இதில் நமது அமைப்பு மூன்று பிரிவுகளாக வகுக்கப்படும். ஒன்று இந்த முற்றுகையிலிருந்து வெளியேறும் பிரிவு அடுத்த முற்றுகையில் இருக்கும். சிறிலங்காப்படைகளுக்கு அது முடிந்தவரை அழிவுகளை கொடுத்து அவர்களை கட்டுப்படுத்தி வெளியேறும் போராளிகளுக்கு வழியேற்படுத்திக் கொடுத்து இறுதிவரை போராடும் அணி. மற்றைய அணி சரணடையும் அணி இறுதி யுத்தத்தில் நடைபெற்றது என்ன என்பதை உலகத்தின் பார்வைக்கு கொண்டுவரும் பொறுப்பு அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. இவர்களில் காயப்பட்ட போராளிகளும் அடங்குவர்** என்று இந்த முடிவு எடுக்கப்பட்டது.

இலங்கை இராணுவம் கிளிநொச்சி நகர் தமக்கு ஒரு கனவு என நினைத்திருக்கும். அந்த அளவுக்கு இழப்புக்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தது. கிளிநொச்சி மீள்வதற்கு ஒருதினத்துக்கு முன்வரை கிளிநொச்சி வைத்தியசாலையின் அறுவைச்சிகிச்சை, அவசர நோயாளர் பிரிவு இயங்கிவந்தது. இதில் ஒருவிடயம் கவனிக்கபடவேண்டியது. இலங்கை இராணுவம் சண்டையிட்டு தமது நிலைகளை கடக்குமென எண்ணியிருந்தால் அவர்கள் தமது நிலைகளை மாற்றியிருப்பார்கள். அடுத்து கிளிநொச்சியைக் கைவிட புலிகள் தீர்மானித்து ஏன்? ஊடறுத்து தமது அணிகள் பின்புறம் பிரிவதற்கான சாத்தியமற்ற பிரதேசம்என்றே இராணுவ ஆக்கிரமிப்பில் இருந்தது. இதனால் இராணுவத்தை அகலக் கால்வைத்து தாக்குவதே சாத்தியம் என விடுதலைப்புலிகள் நினைத்தனர். அதன்படி கிளிநொச்சியை தக்கவைப்பதற்கான சமர் நிறைவுக்கு கொண்டுவரப்பட்டது. அதற்கு அடுத்தபடியான சமர்கள் எல்லாம் இலங்கைப்படைகளுக்கு அழிவைக் கொடுத்து பின்நகரும் சமராகவே அமைந்தது.

இதில் குறிப்பிடத்தக்க சமர் கிளிநொச்சிக்கு கிழக்காக அமைந்த ஒரு குளத்தடுப்பு சமர். இதில் ஏராளமான இலங்கை, இந்தியப்படைகள் கொல்லப்பட்டனர். அந்த நீரோட்டத்தில் முகாம்கள், கனரக ஆயுதங்கள் போன்றன அடித்துச் செல்லப்பட்டிருந்தன. கடற்கரும்புலிகள் அணியொன்று சிறிய விசைப்படகுகளைப் பயன்படுத்தி ஆக்கிரமிப்புப் படைகளை சிதறடித்தது. இதற்கிடையில் தலைவரை வெளியேற்ற முக்கிய தளபதிகள் முயற்சி செய்தனர். அவர் இறுதிவரை தான் நகரப் போவதில்லை என்று பிடிவாதமாக மறுத்துவிட்டார். அந்நிலையில் தலைவரை எப்படியாவது வெளியேற்றவேண்டும் உங்கள் மகன் எங்களுடன் இருக்கட்டும் என்று கட்டாயப்படுத்த தளபதிகளின் யோசனை சரியாகப்பட்டது. இதற்காக மட்டு அம்பாறை பிரதேசத்திலிருந்து வெள்ளை முள்ளிவாய்க்காலூடாக பிரபாகரனின் மகன் வன்னிக்கு அழைத்து வரப்பட்டார். இதற்கிடையில் போராட்டத்தில் ஒரு துர்ப்பாக்கிய நிகழ்வு நடந்திருந்தது. ஆம் இத்தருணத்தில் விடுதலைப் புலிகளின் தளபதிகள். போராளிகள் புதுக்குடியிருப்புக்கு வடக்கே

**இரணியன்**

தினப்புயல்
ஆசிரியர்பீடம்
இல:154, 6வது ஒழுங்கை,
தேக்கவத்தை, வவுனியா.

## தமிழ்மக்கள்! அகிம்சைப்போரா? ஆயுதப்போரா?

தமிழ் மக்களுக்கான தீர்வு தொடர்பில் அரசாங்கத்தினால் திட்டவட்டமான முன்மொழிவுகள் எவையும் இதுவரை முன்வைக்கப்படாத நிலையில் அவற்றைப் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகளை தமிழ்மக்களே எடுக்கக்கூடிய ஒரு சூழ்நிலை உருவாகும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

உலகில் பெரும்பான்மை அரசாங்கத்தினால் கட்டவிழ்த்து விடப்படும் இனமோதல்களினால் பாதிக்கப்பட்ட மக்கள் கூட்டத்தினர் தமது உரிமைகளைப் பெற்றுக் கொள்வதற்காக ஆயுதப்போர், அகிம்சைப்போர் என்ற இரு அணுகுமுறைகளைக் கையாண்டிருக்கின்றனர். இது இலங்கைஉட்படஉலகின்பலநாடுகளிலும் ஏற்பட்டிருக்கின்றன.வரலாறாகிப்போயுள்ள பல அகிம்சைப் போராட்டங்கள், ஆயுதப் போராட்டங்கள் பல சாதக பாதகங்களை உருவாக்கி விட்டிருக்கின்றன.

இலங்கையில் தமிழ்மக்களுக்கு எதிராக சிங்கள அரசினால் கட்டவிழ்த்து விடப்பட்ட இனவாதத்துக்கு எதிராக உருவாக்கப்பட்டது தான் விடுதலைப்புலிகள் அமைப்பு. மிகப்பெரிய சக்தியாகவும், உலகின் பல நாடுகளினாலும் கவனத்துக்கு உரியதான கட்டமைப்பாகவும் உருவாகி தம்மைப் பலப்படுத்திக் கொண்டிருந்த விடுதலைப்புலிகள் அமைப்பு இறுதியில் ஆயுதத்தாலேயே நிர்மூலமாக்கப்பட்டிருக்கிறது. இதுபோல பல நாடுகளிலும் பல ஆயுதக்குழுக்கள் அழிக்கப்பட்டும் அல்லது பலத்தை இழந்தவர்களாகவும் இன்று மாற்றப்பட்டிருக்கின்றனர்.

அகிம்சை ரீதியிலான போராட்டங்கள் பல உலகின் தலைவிதியை மாற்றியமைத்திருக்கின்றன. இந்தியா அன்னியரிடமிருந்து சுதந்திரம் பெற்றதே மகாத்மாகாந்தியின் அகிம்சைப்போராட்டத்தின் மூலமாகத்தான். இந்நிலையில் இலங்கையில் இன்றைய சூழ்நிலையில் தமிழ்மக்கள் இதுபோன்றதொரு முடிவினை எடுக்கவேண்டிய தேவை ஏற்றட்டுள்ளது எனலாம். ஆயுதப்போராட்டம் என்பது தமிழ்மக்களின் தலைவிதியை மாற்றப்போவதில்லை என்பது இன்று நன்குணரப்பட்டிருக்கிற நிலையில் அகிம்சைப் போராட்டம் மூலமாக தமிழ்மக்கள் தமது உரிமைகளைப் பெற்றுக் கொள்ள வேண்டிய சூழலே ஏற்பட்டுள்ளது.

சமஷ்டிக் கோரிக்கையை முன்வைக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, சர்வதேச உடன்பாடுகளுக்கு இணைந்ததான முறையிலேயே அதனை இன்றுகோருகிறது. தனிப்பட்ட மதம், மொழி, கலாசார பின்னணி தனித்துவத்தினை எடுத்துக் காட்டும் வண்ணமாக தமிழ்மக்களுக்கான உரிமைகள் பற்றி அரசாங்கத்துடன் பேசப்படுகிறது. இதனால் தமிழ்மக்களுக்கான தீர்வு குறித்து அரசாங்கம் கட்டாயமாக ஒரு முடிவை எடுக்க வேண்டிய நிலைப்பாடு உருவாகியுள்ளது. ஏற்கனவே பல தசாப்தங்கள் தொடர்ந்த ஆயுதப்போரால் தமிழ்மக்களும்அரசாங்கமும்நேரடியாகவே பாதிக்கப்பட்டிருக்கின்றன. இந்நிலையில் அகிம்சை முறையிலான சமாதானம் மற்றும் உரிமை தொடர்பிலான கையாள்தலே இன்றைக்கு தேவையானதாக இருக்கிறது எனலாம்.

# முற்றுப்புள்ளியிடப்பட்ட ஆயுதப்போராட்டம்

## திம்பு முதல் டோக்கியோ வரை

**67**

த.தே.கூட்டமைப்பு மூதூர் நிலையை அணுகிய விதத்தைக் காட்டவே மேற்படி மேற்கோள் காட்டப்பட்டது. புலிகளைப் பாதுகாக்க, உண்மை நிலையைப் பார்ப்பதைவிட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் எந்த வகையில் உதாசீனப்படுத்தினர் என்பதற்கு இது ஒரு தக்க சான்றாகும். தமிழர் சமூக அகத்தினுள் நடைபெற்று வரும் படுகொலைகள் ஜனனாய மறுப்பை ஊட்டி வளர்க்கிற த.தே.கூட்டமைப்பினர் தமக்கு வெளியில் உள்ள முஸ்லிம் சமூகத்தின் மீதான அடக்கு முறைகளையும், செயற்பாடுகளையும் ஊக்குவிக்கத் துணை நின்றனர்.

ஜப்பானில் நடைபெற்ற ஆறாவது சுற்றுப் பேச்சுவார்த்தைகளிலும் முன்னேற்றங்கள் காணப்படாத போதிலும் அரசியல், மனித உரிமைகள், மனிதாபிமான விவகாரங்களில் கணிசமான முன்னேற்றத்தைக் காணமுடிந்ததாக இரு தரப்பினதும் பிரதிநிதிகள் அறிவித்திருந்தனர். இதில் ஜப்பானும் தனது கவனக் குவிப்பைச் செலுத்தியிருந்தது. ஏற்கனவே இலங்கை விவகாரங்களுக்காக யசூசி அக்காசி நியமிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

பீரிஸூம் சந்தித்து உரையாட இருந்தது. ஏழாம் சுற்றுப் பேச்சுவார்த்தைக்கான நிகழ்ச்சி நிரல் பற்றி உரையாட இருந்தது குறிப்பிடத்தக்கது. இச்சந்திப்பும் ரத்துச் செய்யப்பட்டுள்ளதாக புலிகள் நோர்வே ஊடாக அறிவித்தனர்.

இதேவேளை ஓமந்தையில் ஏப்ரல் 24ஆம் திகதி படைகள், புலிகளிடையே இடம்பெறிருந்த சந்திப்பும் ரத்துச் செய்யப்பட்டது. வடக்கு கிழக்கு கடற்பரப்பில் கடற்படையினருக்கும், கடற் புலிகளுக்குமிடையே ஏற்பட்டிருக்கும் முறுகல் நிலையைத் தவிர்க்கும் வகையிலேயே இச்சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்ணாண்டோவுக்கும், கருணாவுக்குமிடையில் இச்சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இச்சந்திப்பில் தான் கலந்துகொள்வதற்கு நேரமில்லை என புலிகளின் சார்பில் கருணா தெரிவித்திருந்தார்.

பேச்சுவார்த்தையில் இருந்து புலிகள் விலகிக் கொள்வதாக அறிவித்தபோது நாட்டில் மீண்டும் யுத்தம் ஏற்படுமோ என்ற அச்சம் பரவலாகத் தலைதூக்கியது. பேச்சுவார்த்தையை இடைநிறுத்தும் புலிகளின் முடிவு குறித்து ஜனாதிபதி சந்திரிகா, ரணில் ஆகியோர்

விடயங்கள் குறித்தும் பட்டியல் போட்டு விரிவான கடிதமானது புலிகளுக்கு அனுப்பப்படுமெனவும் அவர் தெரிவித்தார்.

### டோக்கியோவுக்கு சென்றடையாத பேச்சுவார்த்தை

2003 ஏப்ரல் 21ஆம் திகதி பேச்சுவார்த்தையிலிருந்து புலிகள் ஒதுங்கிக் கொள்வதாக அறிவித்தவுடன் பேச்சுவார்த்தையை மீளத் தொடர்வதில் பெரும் தொய்வு ஏற்பட்டது. பேச்சுவார்த்தைக்கான கதவு அடைக்கப்பட்டு விட்டதைப் பலர் கண்டனர். தமிழ்மக்களின் தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் வாய்ப்பினை வரலாறு மீளவும்





எட்டுநாள் விஜயம் ஒன்றினை மேற்கொண்டு வாஷிங்டனுக்கு முன்னோடி நிதிவழங்கும் மாநாட்டில் கலந்துகொள்ள சென்ற அக்காசி அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் நடைபெறவிருக்கும் இலங்கை சமாதான முயற்சிகளுக்கு ஆதரவான கருத்தரங்கில் கலந்து கொண்டார். இக்கருத்தரங்குக்கு அமெரிக்கப் பிரதி ராஜாங்க அமைச்சர் றிச்சர்ட் ஆமிடேஜூம், மிலிந்த மொறகொடவும் இணைத்தலைமை வகித்தனர்.

வாஷிங்டன் மாநாட்டில் கலந்துகொள்ள அனுமதி மறுக்கப்பட்டமையால் ஏழாவது மாநாட்டில் கலந்துகொள்ள முடியாது எனப் புலிகள் தெரிவித்திருந்தனர். புலிகள் சர்வதேச ஆதரவைப் பெறவேண்டுமானால் வன்செயலைக் கைவிட வேண்டும் என ஆமிடேஜ் தனது தலைமையுரையில் கூறினார். 1997இல் புலிகளை பயங்கரவாதிகள் பட்டியலில் அமெரிக்கா சேர்த்துக்கொண்டது எனவும் புலிகளின் பெயர் பயங்கரவாதப் பட்டியலில் இருந்து நீங்க வேண்டுமானால் புலிகள் சொல்லாலும், செயலாலும் வன்முறையைக் கைவிட வேண்டும் என அமெரிக்கத் தரப்பு வலியுறுத்தியது.

இதேவேளை ஏப்ரல் 21 2003இல் புலிகளின் சமாதானப் பேச்சுவார்த்தைகளை நிறுத்தி வைப்பதாக பிரதமர் ரணிலுக்கு அன்டன் பாலசிங்கம் ஒரு கடிதத்தை நோர்வேயூடாக அனுப்பினார். இக்கடிதம் அனுப்பப்படும்போது இலண்டனில் இலங்கையரசின் பிரதிநிதி ஜி.எல் பீரிஸூக்கும், பாலசிங்கத்துக்கும் இடையில் ஒரு சந்திப்பிற்கான ஏற்பாடும் தீர்மானிக்கப்பட்டிருந்தது. இதில் அதிகாரப்பரவலாக்கல், உட்பட பல விடயங்கள் குறித்து பாலசிங்கமும்

ஆராய்ந்தனர். அதேவேளை அன்றிரவே பாதுகாப்பு ஏற்பாடுகளை பலப்படுத்தும்படி முப்படைத்தளபதிகளுக்கும் பொலிஸ்மா அதிபருக்கும் ஜனாதிபதி உத்தரவைப் பிறப்பித்தார்.

திடீரென புலிகள் பேச்சுவார்த்தையிலிருந்து விலகிக்கொள்ள முடிவெடுத்தாகப் பலர் கருதியிருக்கக் கூடும். ஆனால் உண்மையில் புலிகள் தமது ஜனனாயக ஆர்வமின்மை காரணமாக பேச்சுவார்த்தை மேசையில் எப்படி விலகிக்கொள்வதென வழிபார்த்தே வந்தனர். சரியான நேரத்தில் புலிகள் பேச்சுவார்த்தையிலிருந்து தூரவிலகியதும் ஒரு தந்திரோபாய முடிவுதான். ரணில் அரசாங்கத்திடமிருந்தும், சர்வதேச சமூகத்திடமிருந்தும் அதிகளவு சலுகைகளைப் பெற்றுக்கொள்ள தமது முடிவு வழிவகுக்கும் எனப் புலிகள் கணக்குப் போட்டனர்.

டோக்கியோ மாநாட்டில் புலிகள் கலந்துகொள்ளப்பேவதில்லை என்ற முடிவு குறித்து கருத்துத்தெரிவித்த அமெரிக்கத் தூதுவர் ஆஸ்லி வில்ஸ் தமது கடுமையான விமர்சனத்தைத் தெரிவித்திருந்தார். ஆயுதங்களை வைத்திருந்தாலும ஆயுத அமைப்புக்களை போணிப்பாதுகாப்பதால் மட்டுமே தமிழர்களுக்கு உரிமை கிடைத்துவிடாது. இத்தகைய மனோநிலை நீண்டகால மோதலுக்கே வழிவகுக்கும். அதன் பலாபலன்கள் துரிதமாகக் கிடைக்கும் எனப் புலிகள் எதிர்பார்க்கக்கூடாது எனவும் ரோமாபுரி ஒரே நாளில் கட்டியெழுப்பப்படவில்லை எனவும் கூறினார்.

அன்டன் பாலசிங்கம் அனுப்பிய கடிதம் தொடர்பான அரசாங்கத்தின் நிலைப்பாட்டை அமைச்சரவை ஆலோசனைக்குப் பிறகு ரணில் வெளியிட்டார். சமாதானப் பேச்சுக்களில் கலந்து கொள்வதைப் புலிகள் நிறுத்தியிருந்தபோதும் அரசின் சமாதான முயற்சிகள் தொடரும் எனவும் புலிகள் குறிப்பிட்டுள்ளவிடயங்கள்குறித்தும்அதில் நடைமுறைப்படுத்தக்கூடிய விடயங்கள் காலஅவகாசம் வழங்கப்படவேண்டிய

தவறவிட்டது. பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்தும் நடத்தியிருக்க வேண்டும் என்பதே நியாயமானவர்களின் நிலைப்பாடாக இருந்து. யுத்தமும் இல்லாத பேச்சுவார்த்தையும் இல்லாத சூழலே தொடர்ந்தது. பேச்சுவார்த்தையை நம்பியிருந்தவர்களுக்கு புலிகளின் இச்செயற்பாடு அதிர்ச்சியை தந்தது.


புலிகள் பேச்சுவார்த்தை மேசையிலிருந்து அகன்று கொள்வதற்கு இடைக்கால சபை என்ற விடயத்தை வாய்ப்பாக பயன்படுத்த வளைந்தனர். அரசாங்கம் சமர்ப்பித்திருந்த இடைக்கால யோசனை ஆவணத்திற்கு மாற்று யோசனைகள் அடங்கிய ஆவணத்தை சர்வதேச சமூகத்தின் ஆதரவுடன் தயாரிக்கப் போவதாக அறிவித்த புலிகள் வெளிநாட்டுச் சுற்றுப் பிரயாணங்களை மேற்கொள்ளத் தொடங்கினர். 19 ஆகஸ்ட் 2003இல் தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழுவினர் பாரிஸ் புறப்பட்டுச் சென்றனர்.


இந்நிலையில் புலிகள் அமைப்பிற்கும் பல்வேறு கருத்துக்கள் தலைதூக்கத் தொடங்கின. பாலசிங்கம் போன்றவர்கள் நாம் ஏலவே வற்புறுத்தியதுபோல பேச்சுவார்த்தைகளிலிருந்து புலிகள் இயக்கம் ஒதுங்கக் கூடாது என்ற கருத்தினை வெளிப்படுத்தியதாக வன்னித் தகவல்கள் தெரிவித்தன. இதனால் இடைக்கால சபை யோசனை ஆவணத்தைத் தயாரிக்கும் பெயரில் ஐரோப்பிய மேற்கு நாடுகளுக்கு பயணம் செய்த புலிகள் குழுவிலிருந்து அன்டன் பாலசிங்கம் ஒதுக்கி வைக்கப்பட்டார். வெளிநாடுகளில் நடைபெற்ற அனைத்துப் பேச்சுவார்த்தைகளுக்கும் புலிகள் சார்பில் தலைமை வகித்த அன்டன் பாலசிங்கம் அத்தகைய அந்தஸ்திலிருந்து அகல வேண்டியேற்பட்டது.

---

**தொடர்வான்...**

# போர்க்குற்றம் தொடர்பில் அமெரிக்கா மூக்கை நுழைப்பது ஏன்?





விடுதலைப் புலிகளுக்கு எதிரான மூன்று தசாப்த காலப் போர் முடிவடைந்துள்ள நிலையில் ஏற்பட்டிருக்கும் அமைதி நிலையைத் தக்கவைத்துக் கொள்வதற்கான வாய்ப்புக்கள் இலங்கையில் தற்போது இல்லை எனலாம். ஏனென்றால் இனவழிப்புக்கான பொறுப்புக்கூறலையும் நல்லிணக்கத்தையும் ஏற்படுத்துவதில் அரசுகாட்டும்தயக்கமேஇதற்குக்காரணம். இதுதொடர்பில் சர்வதேச ரீதியிலான அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டாலும் கூட உள்நாட்டில் நாளுக்கு நாள் பௌத்த இனவாதம் அதிகரித்தே வருகிறது. பொது பல சேனா என்ற அமைப்பானது இன்று சர்வதேச கவனத்தைப் பெற்ற ஒன்றாக மாறியிருப்பது இலங்கையின் பௌத்த இனவாதத்தை நன்கு காட்டுகிறது.

தற்போது சர்வதேச நாடுகள் பலவற்றினதும் பார்வை இலங்கையை மையங்கொண்டுள்ளது. இதில் குறிப்பாக அமெரிக்காவின் செயற்பாடுகள் இலங்கையில் அதிகம் முக்கியம் பெற்றிருக்கின்றன. போர்க்குற்றம் தொடர்பான அழுத்தம் என்ற போர்வையின்கீழ் அமெரிக்கா தனது புலனாய்வு நடவடிக்கைகளை தற்போது முடக்கிவிட்டிருக்கிறது. போருக்குப் பின்னரான ஸ்திரமற்ற சூழ்நிலையில் பல நாடுகளும் தமது அரசியல் வியாபாரத்தை இலங்கையில் செய்ய ஆரம்பித்துள்ளன. அமெரிக்கா, இந்தியா, சீனா, பாகிஸ்தான் போன்றன இவற்றில் மிகமுக்கியமான நாடுகள். இவை இலங்கையின் மீது அக்கறை கொண்ட நாடுகளாகவும், இலங்கையின் மூலம் தமது நலன்களை உறுதிப்படுத்திக் கொள்ள முனையும் நாடுகளாகவும் அமைந்திருக்கின்றன. இதில் அமெரிக்கா முதன்மையானது.

இந்நிலையில் வெளி நாடுகளின் அத்துமீறிய புலனாய்வு நடவடிக்கைகளையும், அரசியல் செயற்பாடுகளையும் குறித்து இலங்கை அரசாங்கம் பலமுறை குறிப்பிட்டுள்ளது. மிக அண்மையில் கூட உள்நாட்டு விவகாரங்களில் வெளிநாடுகள் தலையிடுவதால் சிக்கல்கள் அதிகமாவதாக கூறியுள்ளது. தனது ஆட்சியைக் கவிழ்க்க சர்வதேச அளவில் சதித்திட்டம் தீட்டப்படுவதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவே பலமுறை கூறியுள்ளார். அத்துடன் சிங்கள மக்களுக்கும், முஸ்லிம் மக்களுக்கும் இடையில் அரச சார்பற்ற நிறுவனங்கள் மூலம் பிரிவினையை அமெரிக்கா தோற்றுவித்துள்ளதாக அமைச்சர் விமல் வீரவன்ச குற்றஞ்சாட்டியிருந்தார். பொதுபல சேனா என்ற அமைப்பினூடாக இஸ்ரேல் தனது நடவடிக்கைகளை இலங்கையில் முடக்கிவிட்டிருக்கிறது என்று குற்றம்சாட்டப்பட்டிருந்தது. இப்படியாக அரசாங்கத்துக்கு எதிரான வெளி நாடுகளின் இரகசியச் செயற்பாடுகள் குறித்து, அரசாங்கத்தரப்பினரே அவ்வப்போது கருத்துக்களை வெளியிட்டு வந்திருக்கின்றனர்.

இந்நிலையில் இலங்கையின் அமைவிடமும், இயற்கையான பாதுகாப்பு சூழலும் சர்வதேச நாடுகளினது கவனத்தைப் பெறுகின்ற இடமாக இலங்கையை மாற்றியுள்ளது. இதனால்தான் வெளிநாட்டுப் புலனாய்வு அமைப்புகளினது கவனம் இலங்கை மீது ஏற்பட்டிருக்கிறது.

குறிப்பாக, இலங்கையில் அண்மையில் தோற்றம் பெற்றிருக்கும் மிதவாத பௌத்த அமைப்பான பொது பலசேனாவின் சக்தி மிகக்குறுகிய காலத்துக்குள் மிக அதிகமானதாக செல்வாக்கைப் பெற்றிருப்பதானது பல்வேறு நாடுகளினது கவனத்தை ஈர்த்துள்ளது. திடீரெனத் தோன்றிய இந்த அமைப்புக்கு பலமான பின்னணி ஒன்று இருப்பதற்கான வாய்ப்புக்களை எவராலும் நிராகரிக்க முடியாது. இவ்வமைப்பின் முஸ்லிம்களுக்கு எதிரான நடவடிக்கைகளின் பின்னணியில் வெளிநாட்டு அமைப்புகள் இருக்கலாம் என்ற சந்தேகம் அமெரிக்காவிடம் ஏற்பட்டுள்ளது. இதனால்தான் இலங்கை முஸ்லிம்களின் விவகாரத்தில் அமெரிக்கா அக்கறை கொண்டிருக்கிறது.

பொதுவாக முஸ்லிம் மக்கள் மீதும், முஸ்லிம் நாடுகள் மீதும் அமெரிக்கா எப்போதுமே எதிர்ப்பைத் தான் வெளிப்படுத்தி வந்திருக்கிறது. முஸ்லிம் தீவிரவாதக் குழுக்கள்தான் உலகின் அமைதிக்குப் பங்கம் ஏற்படுத்துகின்றனர் என்பதில் அமெரிக்கா முழு நம்பிக்கை கொண்டிருக்கிறது. இதனால் ஒட்டுமொத்த முஸ்லிம் நாடுகளையும் அமெரிக்கா விரோதமாகவே கருதிவருகிறது. முஸ்லிம் தலைமைத்துவம் கொண்ட பலமிக்க நாடுகள் ஒவ்வொன்றையும் அமெரிக்கா குறிவைத்தே தனது அரசியலைச் செய்து வந்திருக்கிறது. செய்துவருகிறது. இந்நிலையில் இலங்கை முஸ்லிம் மக்களது விவகாரத்தில் மட்டும் அமெரிக்கா எதிர்மறை நிலைப்பாட்டைக் கொண்டிருக்க காரணம் என்ன? இலங்கையில் இஸ்லாமியத் தீவிரவாதிகளின் செல்வாக்குகள் இருப்பதாகக் கருதுவதேயாகும். இதற்கு எடுத்துக்காட்டாக அமெரிக்க நாடாளுமன்றக் குழுவின் முன் உரையாற்றிய அமெரிக்காவின் பசுபிக் கட்டளைப் பீடத்தின் தளபதி அட்மிரல் சாமுவெல் ஜே லொக்லியர், தெற்காசியாவில் இலங்கை உள்ளிட்ட நாடுகளில் லஷ்கர் ஈ தொய்பா அமைப்பின் செயற்பாடுகளுக்கு அதிக வாய்ப்பு இருப்பதாகக் கூறியிருந்தார். அதற்கான வாய்ப்புக்களை இலங்கை கொண்டிருப்பதற்கான ஆதாரங்களும் இருப்பதானது அமெரிக்காவின் சந்தேகத்தை மேலும் வலுப்படுத்துகிறது எனலாம்.

அதாவது இந்தியாவின் பூனேயில் இடம்பெற்ற குண்டுவெடிப்பு தொடர்பான வழக்கில் மரணதண்டனை விதிக்கப்பட்ட பெய்க் என்பவர் தனக்கு கொழும்பில் தான் குண்டு பொருத்தும் பயிற்சி அளிக்கப்பட்டதாக கூறியிருந்தார். அவர் லஷ்கர் ஈ தொய்பா அமைப்பைச் சேர்ந்தவரும்கூட. இதற்கு முன்பு அல்கைதா உறுப்பினர் ஒருவர் அமெரிக்காவின் வேண்டுகோளின்படி இலங்கையில் வைத்து கைதுசெய்யப்பட்டிருந்தமையும் நினைவுகூரத்தக்கது. இதுபற்றிய செய்தி பின்னர் அமெரிக்க மனித உரிமை அமைப்பு ஒன்றினால் வெளியிடப்பட்டிருந்தது. அமெரிக்காவின் பொஸ்டனில் குண்டுவெடித்த போதும், அமெரிக்க ஊடகங்கள் சிலவற்றில் இலங்கை பங்களாதேஷ் வழியாகவே ஈரானுடன் தொடர்புடைய இஸ்லாமிய தீவிரவாதிகள் அமெரிக்காவுக்குள் நுழைவதாக செய்தி வெளியிட்டிருந்தன. இதனால் இஸ்லாமிய அடிப்படைவாதம் இலங்கையில் செல்வாக்கு செலுத்திவிடுமோ என்று அமெரிக்கா கருதுகிறது. இதனால் தீவிரவாதம் இலங்கையில் தோற்றம் பெற்றால் ஆசியப் பிராந்தியத்தில் அது பெரிய தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும் என்று கருதுகிறது. ஆயுத உற்பத்தி, தற்கொலை குண்டு தாக்குதல் போன்ற நடவடிக்கைகள் இலங்கையை மையமாகக் கொண்டு எதிர்காலத்தில் நடைபெற்றால் அது உலகுக்கு பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்தி விடும் என்ற கருதுகிறது. இது தெற்காசியாவின் அமைதிக்கே ஆபத்தானது. இதனால் அமெரிக்காவின் எல்லைமீறிய மூக்கு நுழைவு இலங்கையின் போர்க்குற்றம், இனவழிப்பு என்பதன் அடிப்படையில் ஏற்பட்டிருக்கிறது.

தவிர இந்தியாவின் புலனாய்வு அமைப்பான றோவின் செயற்பாடு இலங்கை விவகாரத்தில் பல தசாப்தங்களாகக் காணப்படுகின்றது. குறிப்பாக விடுதலைப் புலிகள் உள்ளிட்ட இயக்கங்களை வளர்த்தெடுப்பதில் தொடங்கி அவர்களை வீழ்த்தியது வரையிலான செயற்பாடுகளில் றோவுக்கு பங்கு இருந்தது. பல்வேறு சந்தர்ப்பங்களில் றோவின் தவறான முடிவுகள், செயற்பாடுகள், நடவடிக்கைகளால் இலங்கையில் பல சிக்கல்கள் உருவாகியிருந்தன என்பதும் உலகறிந்ததே. (விடுதலைப்புலிகளின் ஆயுதப்போராட்டம் முற்றுப்பெற்றமை ஆனால் இப்போதும் கூட றோவின் கவனம் இலங்கை மீது உள்ளது என்றே கூறவேண்டும்.

இதைத்தவிர சீனாவின் பொருளாதார ரீதியிலான செயற்பாடுகள் இலங்கையில் அண்மைக்காலங்களாக மிக அதிகமாகக் காணப்படுகின்றன. இந்நிலையில் சீனாவும் தனது புலனாய்வு முகவரமைப்புகளை இலங்கையில் ஈடுபடுத்தியுள்ளதோ என்ற சந்தேகமும் எழாமலில்லை. எனினும் பல்வேறு பொருளாதார செயற்றிட்டங்களில் பணியாற்றுவதற்காக பெருமளவு சீனர்கள் இலங்கையில் நிலைகொண்டுள்ளனர் என்பது உண்மையே. பொருளாதார ரீதியாகவும் பாதுகாப்பு ரீதியாகவும் இலங்கை மீது சீனா செலுத்தி வரும் ஆதிக்கம் அமெரிக்கா மற்றும் இந்தியாவுக்கு கவலையை ஏற்படுத்தியுள்ளது. இலங்கையிலிருந்து, இந்தியாவை, சீனா கண்காணிக்கலாம் என்று இந்தியா அச்சம் கொண்டிருக்கும் அதே வேளை ஆசிய கடற்பிராந்தியத்தில் தனது பத்தாண்டு கால செயற்றிட்டத்துக்கு சீனா இடைஞ்சலாக இருப்பதை அமெரிக்கா இப்போது உணர்ந்துள்ளது.

இந்நிலையில் இலங்கை அரசாங்கத்துடன் பல்வேறு காரணங்களுக்காகவும் அமெரிக்கா இன்று முரண்பட்டுக் கொண்டிருக்கிறது. இலங்கையின் இனவழிப்புப் போராட்டத்துக்கு அடிப்படையில் சகல உதவிகளையும் செய்தது அமெரிக்கா என்ற வகையிலும், இலங்கை பாகிஸ்தான், சீனா போன்ற நாடுகளுடன் இலங்கை கொண்டிருக்கும் உறவுகளும், பாகிஸ்தானுடன் கொள்ளும் உறவானது தீவிரவாதம் இலங்கையில் நிலைகொள்ள காரணமாக அமைந்துவிடும் என்றும், (இலங்கைக்கான பாகிஸ்தான் தூதுவராக நியமிக்கப்பட்டுள்ளவர் முன்னாள் இராணுவ அதிகாரி ஒருவர் என்பது சுட்டிக்காட்டத்தக்கது) சர்வதேச நாடுகள் பல இலங்கையை இன்று எதிர்க்கின்ற நிலையில் அமெரிக்காவுக்கு எதிர்ப்பான நாடுகளின் உதவியை இலங்கை பெற்றுக்கொண்டு தனது சக்தியை பலப்படுத்தினால் அமெரிக்கா தான் எதிர்பார்த்ததை ஆசியப் பிராந்தியத்தில் செயற்படுத்த முடியாது போய்விடும் என்றதனாலும், இலங்கை விவகாரத்தில் அதிகமாக ஆர்வம் செலுத்துகிறது எனலாம்.


டோக்கியோ மகாநாட்டின் (10.06.2003) போது இலங்கைப் பிரச்சினை தொடர்பாக 51 நாடுகளும் 22 சர்வதேச அமைப்புக்களும் தமது கவனத்தை செலுத்தியிருந்தன. பல நாடுகள், அமைப்புக்கள் விடுதலைப்புலிகளுக்கு ஆதரவாக இருந்து வந்திருக்கின்றனர். பல உள்ளூர் ஒப்பந்தங்களிலும் வெளி நாடுகள் தலையிட்டிருக்கின்றன. ஆனால் தற்போதைய காலகட்டத்தில் விடுதலைப்புலிகளின் போராட்டம் பயங்கரவாத நடவடிக்கை என அமெரிக்கா சித்தரித்து இலங்கைக்கு ஆயுத மற்றும் நிதியுதவிகளை வழங்கி அவ்வமைப்பை

05ஆம் பக்கம் பார்க்க...

மறவன்

# அமைச்சர்களான ஆறுமுகன் தொண்டமான், முத்து சிவலிங்கம் ஆகியோர் சாமிமலை பிரதேச அபிவிருத்தியில்...


சாமிமலை கவரவில தோட்ட 200ஏக்கர் பிரிவில் கடந்த ஏப்ரல்மாதம் 2ஆம் திகதி 22 குடும்பங்கள் வாழ்ந்த லயன் ஒன்று மின்சார ஒழுக்கு காரணமாக தீப்பற்றி எரிந்து முற்றிலும்



சாம்பரானது. இந்த தீ விபத்தால் 22 குடும்பங்களைச் சேர்ந்த 262 பேர் அன்று முதல் இன்று வரை தற்காலிக குடியிருப்புக்களில் வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் சொல்லொணாத் துயரை அனுபவித்த வருகின்றனர்.

இவர்களது துயரை நீக்க அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான் அவர்களும் அமைச்சர் முத்து சிவலிங்கம் அவர்களும் அத்தோட்ட மக்களை நேரடியாகச் சந்தித்து அவர்களுக்கென தனித்தனி வீடுகள் 5 பரப்புக் காணியில் கட்டி கொடுக்க முன்வந்தனர். தற்போது இவ் 22 குடும்பத்தினருக்கும் 22 வீட்டுமனைகள் அமைக்கும் பணி நிறைவுபெறும் தருவாயில் உள்ளது. தனிஒரு இல்லம் அமைக்க ரூபா 5 இலட்சத்து 15ஆயிரம் ரூபாய் நிதி ஒதுக்கபட்டுள்ளது. இந்த நிதியினைக் கொண்டு 2 படுக்கையறை, 1 வரண்டா, மலசலகூடம் மற்றும் மின்சார வசதிகளுக்கான தனிதனியாக ஒவ்வொரு இல்லங்களுக்கும்மின்சாரக் கம்பிகள் மற்றும் உபகரணங்கள் இட்டு வயரிங் செய்யப்பட்டுள்ளது. குடிநீர் இணைப்பும் செய்யப்பட்டுள்ளது.

இந்த வேலைத்திட்டத்தை ஆரம்பிக்க கவரவலை தோட்ட முகா மையாளர் அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான் அவர்களிடம் வேண்டுகோள்



விடுக்கப்பட்டதை தொடர்ந்து அமைச்சர் ஆறு முகம் தொண்டமான் அவர்களின் பணிப்புரையின் படி பிரதி பொருளா தார அபிவிருத்தி அமைச்சர் முத்து சிவலிங்கம் அவர்களினால் 2012ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் அடிக்கல் வைபவ ரீதியாக நாட்டப்பட்டு வேலையை ஆரம்பித்து வைத்தார். தோட்ட மனித வள அபிவிருத்தி நிதியத்தின் மூலம் இதற்கான மொத்த நிதி யும் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. மேலும் இந்த நிதி யினைப் பெற்றுக்கொடுக்க அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் முன்வந்து செயற்பட்டமையும் வரவேற்கத்தக்க விடயமாகும்.

சாமிமலை மஸ்கெலியா பகுதி யில்மொக்காதோட்டத்திலும், லெங்கா தோட்டத்திலும், ராணி தோட்டத்திலும் லக்சபானதோட்டத்திலும்இவ்வாறான லயன்கள் தீக்கிரையாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. மின்சார கோளாறு காரணமாக தீ பற்றிய தோட்ட குடியிருப்புகளுக்கு மின்சார சபையி னர் எந்த விதத்திலும் முன்வந்து உதவவில்லை. இதற்கு முக்கிய காரணம் மின்சார வயரிங் முறை முறையாக செய்யப்படாமையும் அவ்வாறான இல்லங்களுக்கு மின் இணைப்பு வழங்கியதும் மின்சார சபையே காரணமாகும் என 200 ஏக்கர் பிரிவு மக்கள் தெரிவிக்கின்றனர்.

மேலும் 185 வருடங்களுக்கு முன்னர் அமைக்கப்பட்ட லயன் முறை யை இல்லாது ஒழித்து குறைந்தபட்சம் 71/2 பரப்புக் காணியின் தனித் தனி வீடுகள் அமைத்துக்கொடுக்க மனித வள அபிவிருத்தி நிறுவனம் முன்வரவேண்டும்.

கடந்த மாதம் ஜனாதிபதி அவர்களினால் வரவுசெலவுதிட்ட வாசிப்பின் போது பெருந்தோட்ட மக்களுக்கு மாடி வீடு திட்டம் அமைக்க முன் வந்துள்ளார். அத னைத் தவிர்த்து மலையக பகுதியில் மலைகள் நிறைந்து காணப்படுவதால் அதற்கேற்ப தனித்தனி குடியிருப்புக்கள் அமைப்பது உகந்த விடயமாகும் என பல அரச மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள், தொழிற்சங்கவாதிகள் தொண்டு நிறுவனங்கள் தங்களது அபிலாசைகளை பத்திரிகைகளில் வெளியிட்டிருந்தன.

அதற்கு ஒரு முன் உதாரண மாக சாமிமலை கவரவல தோட்ட 200 ஏக்கர் பிரிவில் அமைக்கப்பட்டுள்ள இந்த குடியிருப்புக்கள் ஒரு எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது. ஒரு முறைப்பாடு மட்டுமே உள்ளது என குடியிருப்பாளர்கள் கூறுகின்றனர். 71/2 பரப்பு காணியாக இருந்தால் வீட்டுத் தோட்டமும் செய்துகொள்ள முடியும் எமக்கு கிடைத்தது 51/2 பரப்பு மட்டுமே எனவும் எங்களது தோட்டத்தில் புதிதாக பயிரிடப்பட்ட தேயிலை செடிகள் மட்டுமே உள்ளதால் அந்த தேயிலை செடிகளை அப்புறப்படுத்தி வீடுகள் கட்டப்பட்டால் தொழிலாளர்களின் வேலை நாள் குறையும் என கூறுகின்றனர். ஆகை யால் புற்றரைகளில் தனித்தனி வீடுகள் அமைத்து கொடுத்து லயன் முறையை இல்லாது ஒழிக்க வேண்டும் என அத்தோட்ட குடும்பநல உத்தியோகத்தர் திரு.ரகுபதி கூறினார்.

(படங்களும், தகவலும்
செ.தி பெருமாள்,
மஸ்கெலியா)

---

## 02 ஆம் பக்கத் தொடர்ச்சி

நிலைகொண்டிருந்தனர். சிறிலங்கா இராணுவத்தின் நகர்வுக்காகக் காத்திருந்தனர். இராணுவப் படையணி கள் ஊடறுக்கும் போது பின்புறமாகத் தாக்கும் திட்டம் அவர்களிடம் இருந்தது. இதில் விடுதலைப்புலிகளின் தாக்குதல் படையணியில் பல முக்கிய தள பதிகள் அடங்கியிருந்தனர். இவர்களை ஒன்றிணைக்கும் பொறுப்பு தீபனி டம் கொடுக்கப்பட்டிருந்தது. இந்தத் தாக்குதலில் 300 கரும்புலிகள் 3000 கிலோ வெடிகுண்டுகளுடன் மாபெரும் தாக்குதல் ஒன்றினை நடத்தி பிரபா கரனை காப்பாற்றும் நடவடிக்கையில் ஈடுபட்டனர். பிரபாகரனின் பாதுகாப்பை உறுதிப்படுத்திக் கொண்டனர். இந்தத் தாக்குதலில் 1500 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். 2000பேர் வரை காயமடைந்தனர். இத்தாக்குதலில் தளபதி சசி மாஸ்டர் வீரச்சாவைத் தழுவிக்கொண்டார். இத்தாக்குதலில் தளபதி சொர்ணம் அவர்களும் காயமடைந்து பின்னர் சயனைட் அருந்தி வீரச்சாவினைத் தழுவிக்கொண்டார். அதன்பின்னர் பிரபாகரனால் வகுத்துக்கொடுக்கப்பட்ட தாக்குதல் திட்டம் பொட்டுஅம்மானிடம் பொறுப்பு கையளிக்கப்பட்டது. மட்டுமல்லாது விடுதலைப்புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன், சமாதான செயலாளர் புலித்தேவன் இருவ ரையும் காயமடைந்த போராளிகள் பொதுமக்கள் அனைவருடனும் சர ணடையுமாறு பணிக்கப்பட்டிருந்தது. வெளிநாட்டு தொடர்புகள் ஊடாகத்தான் இவர்களை சரணடையும் நிலைக்கு விடுதலைப்புலிகள் முன்வந்தார்கள். வெள்ளைக்கொடியுடன் சரண டைய வந்த போராளிகளையும் பொதுமக்களையும் இராணுவத்தரப்பு சரமாரியாக சுட்டுக்கொன்றுவிட்டு பலியை விடுதலைப்புலிகள் மீது சுமத்தியது. மீண்டும் 2009.9.17ஆம் திகதி பிற்பகல் நடைபெற்ற ஊடறுப்புச் சமரில் இன்னொமொரு தொகுதி போராளிகள் பாதுகாப்பான பகுதிக்கு கொண்டுவரப்பட்டார்கள். அதன்பின் நடந்த சமரில் கணிசமான இழப்புக்களை அரச படைகள் சந்தித்தது. இதன்போது பிரபாகரனின் மகன் சார்ளஸ் அன்ரனி வீரச்சாவைத் தழுவிக்கொண்டார். 18ஆம் திகதி இறுதி ஊடறுப்புச் சமர் நடைபெற்றுக்கொண்டிருந்த போது இன்னும் முக்கிய சில தளபதிகள் போரா ளிகளினால் வெளியேற்றப்பட்டனர்.

இந்த இறுதிச்சமர் நந்திக்கடல் ஓரமாக நடத்தப்பட்டது. இச்சமருக்காக புலனாய்வுப்பிரிவின் மற்றொரு தலைவரான விமலன் நியமிக்கப்பட்டிருந்தார். காயமடைந்த போராளிகளும், பொதுமக்களும் வெள்ளைமுள்ளிவாய்க்கால் பகுதி யில் தங்கவைக்கப்பட்டிருந்தனர். இவர்களை இராணுவத்தினர் சுட்டுக்கொன்றதாக அப்போது விடுதலைப்புலிகள் கூறியிருந்தனர். நந்திக்கடல் வழியாக போரா ளிகள் தளபதிகளை வெளியேற்றிக் கொண்டிருந்தபோது தளபதி விமலன் வீரச்சாவைத் தழுவிக்கொள்ள போர் முற்றுப்பெற்றது.

விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் என்று காண்பிக்கப்பட்ட உடல் விமல் மாஸ்டரின் உடல்தான். சண்டைக்களத்தில் நின்ற போராளிகளுக்கு பிரபாகரனையும், விமல் மாஸ்டரையும் நன்கு தெரியும். இந்தப்போரில் தாம் வெற்றிபெற்றதாக காட்டிக்கொள்ள சித்தரித்த கதை தான் பிரபாகரனின் மரணம். தற்பொழுது விடுதலைப்புலிகளின் வெளிநாட்டுப் பயிற்சிவிப்பாளர் சீலனை இலங்கை இராணுவம் கே.பியின் உதவியுடன் இந்தோனேசியாவில் வைத்து கைது செய்துள்ளதாக கூறுகி றது. கைதாகிய சீலனின் கருத்துப்படி முக்கியமான பலர் இன்னும் உயிருடன் இருப்பதாக் கூறியுள்ள செய்திகள் இப்போது இணையதளங்களில் உலாவுகின்றன. மறுபுறம் நான்கு வருடங்களுக்குப் பிற்பாடு பிரபாக ரனின் இறப்பில் சந்தேகமும் அவர் உயிருடன் இருப்புதான தகவல்களும் ஏன் கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கிறன என்பதும் அரசியலரங்கில் பல சந்தேகங்களை எழுப்பியுள்ளது.

## 04ஆம் பக்கத் தொடர்ச்சி

இலங்கையிலிருந்து அழிக்க உதவியிருக்கிறது. ஆனால் தற்பொழுது மீண்டும் மூக்கை நுழைப்பதென்பது சந்தேகத்தை மீண்டும் வலுப்படுத்தகிறது.

இதனால் அரசாங்கத்தை கவிழ்க்கும் முனைப்புக்களில் அமெரிக்கா தீவிரம் காட்டுகிறது. அதற்காகத்தான் எதிர்வரும் மார்ச் மாதம் ஜெனீவாவில் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை அமர்வுகளில், இலங்கைக்கு எதிராக அமெரிக்கா தீர்மானம் நிறைவேற்றும் என்பது தெளிவாகத் தெரிகின்றது. தீர்மானம் நிறைவேற்றப்படுவதுடன் இலங்கைமீது பொருளாதாரத் தடைகளை விதிக்க அமெரிக்கா முயற்சிக்கும். ஜனாதிபதி மற்றும் பொதுத் தேர்தலை இலக்கு வைத்து அமெரிக்கா இப்படி செயற்படும்.

இந்நிலையில் போர்க்குற்றம் என்பதற்கு அப்பால் ஆசியப்பிராந்தியத்தில் தனது ஆதிக்கத்துக்கு சவாலாக இருக்கக்கூடிய விடயங்கள் பலவும் இலங்கையை களமாகக் கொண்டிருப்பதனால் மனிதஉரிமை கூட்டத் தொடரின் ஊடாக இலங்கைக்கு அழுத்தம் கொடுத்து அதனூடாக இலங்கையைத் தன்கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முயற்சிப்பதே அமெரிகா வின் திட்டம் என்பது இப்போது இலகுவா கப் புரிந்துள்ளது எனலாம்.

# ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையில் மாற்றம் தேவை

இருகட்சிப் பாராளுமன்ற ஜன நாயகம் உடைய இலங்கையில் தேசிய ரீதியாக ஜனாதிபதிக்கு வழங்கப்படும் கௌரவத்துக்கு அடுத்தபடியான கௌரவத்தை பெறு வது எதிர்க்கட்சியாகும். இலங்கையின் எதிர்க்கட்சியாக இன்று காணப்படுவது ஐக்கிய தேசியக் கட்சியாகும். பலம்வாய்ந்த அரசியல் சக்தியாக இலங்கை வரலாற்றில் விளங்கியிருந்த ஐக்கிய தேசியக் கட்சி இன்று தொய்ந்துபோயுள்ள பெயரள விலான எதிர்க்கட்சியாகத்தான் விளங்குகிறது எனலாம்.

பொதுவாக இன்று பார்த்தால் ஐக்கிய தேசியக் கட்சியைச் சிங்கள மக்கள்கூட நிராகரித்து விட்டனர் என்றுதான் கூறவேண்டும். இலங்கை அரசியல் வரலாற்றில் ஐக்கிய தேசி யக் கட்சியின் முக்கியத்துவம் மிக அதிகம் எனலாம். தமிழ்மக்களின் நலன்களுக்கு எதிராக தொடர்ந்தும் செயற்பட்டு வந்த ஒரே ஒரு கட்சி என்றால் அது ஐக்கிய தேசியக் கட்சிதான். வரலாற்றில் தமிழ்மக்களுக்கு இழைத்த துரோகங்களையும் அதனூடாக அதன் பலப்படுத்தப்பட்ட சக்தியையும் சற்றுப் பின்னோக்கிச் சென்று பார்ப்போம்.


தமிழ்மக்களுக்காக நடத்தப்பட்ட உரிமைப் போராட்டங்கள் எதுவும் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக் காலத்தில்



நடைபெற்றிருக்கவில்லை. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஆட்சியின்போதும், இடதுசாரிக் கட்சிகள் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் இணைந்து ஆட்சி செய்திருந்த காலத்திலும் தான் நடைபெற்றிருக்கின்றன. ஏனெ னில் தமிழ்மக்களின் தலைமைகள் அன்றிலிருந்து ஐக்கிய தேசியக் கட்சியுடன் பேணிவந்த உறவுதான். அத்துடன் சிறுபான்மையினரின் நலன்களில் அக்கறை செலுத்தும் ஒரு கட்சியாக அன்றிலிருந்தே தன்னை வெளிப்படுத்தி வந்திருக்கிறது.


ஐக்கிய தேசியக் கட்சி சிறுபான்மைத் தமிழ்மக்களின் நல னில் அன்றிலிருந்து முழுஅக்கறை செலுத்தாமல் போக்குக் காட்டியே வந்திருக்கிறது. அதாவது தேசிய அரசாங்கம் என்ற பெயரில் டட்லி சேனநாயக்கா 1965இல் அமைத்த அரசாங்கத்தில் தமிழரசுக்கட்சியும் பங்காளியாக இருந்தது. அந்நாளில் தமிழரசுக்கட்சி சார்பில் எஸ்.ஜே.வி செல்வநாயகமும், ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் டட்லி சேனாநாயக்காவும் கைச்சாத்திட்ட ஒப்பந்தத்தில் மாவட்ட சபைச் சட்டத்தை நிறைவேற்றி நடைமுறைப்படுத்துவதாக ஐக்கிய தேசி யக் கட்சி வாக்குறுதி அளித்திருந்தது. ஆட்சியமைத்து சிறிதுகாலம் சென்றபின் பிரதமர் டட்லி சேனநாயக்கா தமி ழரசுக் கட்சித் தலைவர்களை அழைத்து மாவட்ட சபையை வழங்குவதென்ற உறுதிமொழியை நிறைவேற்ற இயலாத நிலையில் இருப்பதாக அறிவித்தார். அத்துடன் அரசாங்கத்தில் சிறிது காலம் செயற்பட்டால் மாவட்ட சபைக் கோரிக்கையை தமிழரசுக்கட்சி வலியுறுத்தாமல் விட்டுவிடும் என்று தான் கருதியிருந்ததாகவும் அவர் வெளிப்படையாகவே கூறினார். ஆனால் டட்லியின் வாக்குறுதி மீறலை தமிழ்த்தலைமைகள் அன்று எதிர்த்திருக்கவுமில்லை.

தமிழ் மக்களுக்கான இனப்பிரச்சினை தோன்றுவதற்கு அத்திவாரமிட்டதே ஐக்கிய



தேசியக்கட்சிதான். அதனை எல்லோரும் இன்று புரிந்து வைத்துள்ளார்களா என்பது சந்தேகம்தான். சிங்களம் மட்டுமே சட்டம் கொண்டுவந்தது தான் இனப்பிரச்சினைக்கு அடிப்படை என்றே பலரும் விளங்கிவைத்துக் கொண்டிருக்கிறோம். ஆனால் அதற்கு முன்பே இனப்பிரச்சினைக்கான அத்திவாரம் இடப்பட்டிருக்கிறது. ஐம்பதுக்கு ஐம்பது கோரிக்கை, சமஸ்டித்தீர்வு, வடகிழக்கின் திட்டமிடப்பட்ட சிங்களக் குடியேற்றங்கள் போன்றன இனப்பிரச்சினைக்கான மூல வேராய் அமைந்திருக்கின்றன.

1946இல் ஜி.ஜி பொன்னம்பலம் ஐம்பதுக்கு ஐம்பது என்ற கோரிக்கையை முன்வைத்தார். எஸ்.ஜே.வி செல்வநாயகம் 1947ஆம் ஆண்டு சமஷ்டிக் கோரிக்கையை முன்வைத்தார். முதலாவது பாராளுமன்றத் தேர்தல் முடிந்ததும் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தில் இணைவதா வேண்டாமா என்ற சர்ச்சை தமிழ்க் காங்கிரஸ் கட்சியில் ஏற்பட்டது. இணையவேண்டும் என்பதில் ஜி.ஜி பொன்னம்பலம் தீவி ரமாக இருந்தார். சில உரிமைக ளையாவது பெறா மல் அரசாங்கத்தில் இணையக்கூடாதுஎன்றஆலோசனையை எஸ்.ஜே.விசெல்வநாயகம்முன்வைத்தார். சமஷ்டித் தீர்வு பற்றி ஆராய்வதற்கு அரசியலமைப்பு நிர்ணய சபையொன்றை



அமைக்க வேண்டும் என்பது அப்போது செல்வநாயகத்தின் கோரிக்கையாக இருந்தது.

ஜி.ஜி பொன்னம்பலத்தின் ஐம்பதுக்கு ஐம்பது கோரிக்கையும், எஸ்.ஜே.வி செல்வநாயகத்தின் சமஷ்டிக் கோரிக்கையும் இனப்பிரச்சினையை மனதில் வைத்தே அன்று முன்வைக்கப்பட்டிருந்தன. ஆக இப்போதே இனப்பிரச்சினைக்கான அடிக்கல் நாட்டப்பட்டிருக்கிறது. பின்பு வடக்கு, கிழக்கில் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டு வந்த சிங்களக் குடியேற்றங்களும் ஒரு காரணமாக அமைந்தது. சிங்களக் குடியேற்றங்களை திட்டமிட்டு நிறைவேற்றியவர் ஐக்கிய தேசியக் கட்சியின் பிதாமகர் டி.எஸ்சேனநாயக்காதான். இவர் 1938இல் வவுனியாவின் பாவக்குளத்தையும், திரு மலையின் கந்தளாய்க் குளத்தையும் புனரமைத்து அப்பகுதிகளில் சிங்களக் குடியேற்றங்களை நிறுவினர். இதில் தமிழ்மக்கள் உள்வாங்கப்படவில்லை. கல்லோயா அபிவிருத்தித் திட்டத்திலும் இந்நிலமையே பின்பற்றப்பட்டது. இப்படி ஒவ்வொன்றாக நடந்தேறியது.

பின் சிங்களம் மட்டும் சட்டம் வந்தது. இதிலும் ஐக்கிய தேசியக் கட்சியின் துவேசம் தொனித்திருந்தது. அச்சட்டத்திற்கான தீர்மானம் மீதான பாராளுமன்ற வாக்கெடுப்பில் ஐக்கியதேசியக் கட்சியின் அனைத்து உறுப்பினர்களும் ஆதரவாக வாக்களித்திருந்தனர். நாட்டின் அரசகரும மொழியாக சிங்களம் இருக்க வேண்டும் என்ற தீர்மானத்தை ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, மற்றும் ஐக்கிய தேசி யக் கட்சி ஆகியன 1955, 1956களில் தனித்தனியே கொண்டுவந்தன. இதில் ஐக்கிய தேசியக் கட்சி கொண்டுவந்த தீர்மானத்தில் தமிழ்மொழியின் நியா யமான உபயோகம் பற்றி எதுவும் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இது இனப்பிரச்சினை கூர்மையடையக் காரணமாயமைந்தது.

இப்படியான வரலாற்று ரீதியான ஐக்கிய தேசியக் கட்சியின் குரோத மனப்பான்மையும் அவற்றினூ டாக அக்கட்சியின் பலமும் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. ஆனால் இன்றைய சூழ்நிலையில் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவத்தில் மாற்றம் தேவை என்பது உணரப்பட்டிருக்கிறது. அதாவது தமிழ்மக்களின் நலனைப் பொறுத்தவரையில் அப்போதும் சரி, இப்போதும் சரி எதிர்மறை நிலைப்பாட்டையே கொண்டிருக்கிறது. இனப்பிரச்சினைக்கான தீர்வுத்திட்டம் குறித்தும் எந்தவிதமான யோசனைகளும் இல்லை. அதைவிட ஆளும் கட்சிக்கு சவாலான எதிர்க்கட்சியாகக் கூட தன்னை நிலைப்படுத்திக் கொள்ள முடியாத நிலை யில் இன்று இருக்கிறது. சர்வதேச அளவில் விமர்சிக்கப்படும் அளவுக்கு இன்று இதன் பலவீனம் காணப்படுகிறது என்றுதான் கூறவேண்டும்.

மூன்றில் இரண்டு பெரும்பான்மையைக் கொண்டு குடும்ப ஆட்சி நடத்தும் மஹிந்த ராஜபக்ஷ எதிர்க்கட்சியின் சவாலுக்கு முகம்கொடுக்கக் கூடிய தான ஒரு நிலைப்பாடு இன்றில்லை. சம்பிரதாயத்துக்காகவே பிரதமருக்கு இணையான அந்தஸ்தும், மதிப்பும் எதிர்க்கட்சித் தலைவருக்கு இன்று வழங்கப்பட்டு வருகிறது. அதற்கு ஏற்றாற்போல் கட்சிக்குள் உட்பூசல்களும் அதிகரித்து வருகின்றன. கட்சியின் முக்கிய மூத்த உறுப்பினர்கள் பலர் அரசுடன் இணைந்துகொண்டு பிரிந்து செல்கின்றமையும் நேரடியாகவே ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க பதவியிலிருந்து விலக வேண்டும் எனவும் கூறுகின்றமையும் அக்கட்சியின் அகௌரவத்தைக் காட்டுகிறது.

இந்நிலையில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மீண்டும் அரசியலில் மறுபிரவேசம் செய்யவுள்ளார் என்ற செய்தி அண்மைக்காலமாக அதிக முக்கியத்துவம் பெற்ற ஒன்றாக மாறியிருக்கிறது. இவரது அரசி யல் பிரவேசமானது ஆளும்கட்சிக்கு பெரும் நெருக்கடியைக் கொடுக்கும் என்றே பேசப்படுகிறது. ஐக்கிய தேசியக் கட்சி, இலங்கை முஸ்லிம் காங்கிரஸ், ஜனநாயக மக்கள் முன்னணி, நவ ஹெல உறுமய போன்ற கட்சிகளுடன் கூட்டணி அமைத்துக்கொண்டு அடுத்த தேர்தலில் களமிறங்கப் போகிறார் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இந்நிலையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் குடும்ப வாரி சான சந்திரிகா குமாரதுங்கவுக்கு சிங்கள மக்கள் மத்தியில் ஆதரவு இயல்பாகவே இருக்கும் என்பது உண்மையே. அத்துடன்



இன்றுள்ள அரசாங்கத்தின் மீது வெறுப்புற்றிருக்கும் சிங்கள மக்களும் அடுத்த தெரிவான சந்திரிகாவை தெரிவு செய்வதற்கான வாய்ப்புக்களும் அடுத்த பொதுத்தேர்தல் காலத்தில் இருக்கத்தான் செய்கிறது. இவற்றைவிட தமிழ்மக்கள் குறித்துப் பார்த்தால் இன்றுள்ள அரசாங்கத்தை 90 வீதத்துக்கு மேலானவர்கள்எதிர்க்கிறார்கள். இதனால்



சந்திரிகா அடுத்த பொதுத்தேர்தலில் நின்றால் கணிசமான தமிழ்மக்களது ஆதரவு கிடைக்கத்தான் செய்யும். விடுதலைப்புலிகளுடான போர்நிறுத்த ஒப்பந்தம், சமாதான முன்னெடுப்புக்கள் குறித்த சந்திரிகாவின் செயற்பாடுகளை தமிழ்மக்கள் நன்கு அறிந்து வைத்திருக்கின்றனர்.

ஆகவே இப்படியான எதிர்வுகூறல்கள் எல்லாம் அந்தப்படியே நிகழுமாக இருந்தால் நிச்சயமாக ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவத்தில் அது பெருமளவிலான மாற்றத்தை ஏற்படுத்தும் என்றே கூறலாம். ஆகவே பலம்வாய்ந்த அரசியல் சக்தியாக ஐக்கிய தேசியக் கட்சிளை மாற்றுவதுடன் எது நல்லது கொட்டது என்பதைச் சீர்தூக்கிப் பார்த்து முடிவுகளை எடுக்க வேண்டியது ரணில் விக்கிரமசிங்கவின் முக்கிய பணி யாகும். அப்படி நடைபெறாது போனால் அடுத்த பொதுத்தேர்தலில் ஐக்கிய தேசி யக் கட்சியின் தலைமைத்துவத்தில் மாற்றம் ஏற்படப் போவது தடுக்க இயலாத ஒன்றாகவே மாறும். எது மாறினாலும் தமிழ்மக்களுக்கான அதிகாரப்பகிர்வு விடயத்தில்புதிதாகஎந்தநன்மையும்விளை யும் என்று நாம் எதிர்பார்க்க முடியாது என்பதுதான் உண்மை நிலைப்பாடு.

**மறவன்**

தமிழ்மக்களின் அரசியல், சுயநிர்ணய உரிமைகளைப் பெற்றுக் கொர்டுப்பதற்காக என்று விடுதலைப்புலிகளுடன் சேர்ந்து ஆயுதம் ஏந்திப் போராடியவர்கள் அனைவரையும் (ஈ.பி.டி.பி தவிர்ந்த) இணைத்துக்கொண்டு அதனை தமிழ் மக்களது ஒற்றுமையின் வெளிப்பாடாக காண்பித்து வடமாகாண சபைத் தேர்தல் 2013இல் இறுதிப் பெரும்பான்மை வாக்குகளைப் பெற்று வடக்கில் தமிழ்மக்களுக்கான தனித்துவமான ஆட்சியதிகாரத்தைக் கொண்டிருக்கும்கட்சியாகதமிழ்த்தேசியக் கூட்டமைப்பு இன்று காணப்படுகிறது.


விடுதலைக்காக புறப்பட்ட போராட்ட அமைப்புக்களை தனது கூட்டுக்குள் இணைத்துக் கொண்டதன் மூலம் இன்றும் விடுதலையை நேசிப்பவர்களாக தமிழ்மக்களின் தலைவர்கள் இருக்கின்றனர் என்பதைத் தமிழ்மக்கள் நம்பியதால் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு இன்று பலம் பொருந்திய அரசாங்கத்துக்கு ஒரு எதிர்க்கட்சி ஏனைய இயக்கக் கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்கள் வெளிப்படையாகவே கூறி தமது அதிருப்தியைத் தெரிவித்திருந்தனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கத்துவம் வகிக்கும் கட்சிகளில் தமிழரசுக்கட்சி மிகவும் பழமைவாய்ந்தது. இக்கட்சி 1949ஆம் ஆண்டில் இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியில் இருந்து பிரிந்த எஸ். ஜே. வி. செல்வநாயகம் தலைமையில் உருவாக்கப்பட்டது. 1972ஆம் ஆண்டில் இக்கட்சி தமிழ்க் காங்கிரஸ் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ஆகிய கட்சிகளுடன் இணைந்து தமிழர் ஐக்கிய முன்னணி என்ற பெயரில் கூட்டணி அமைத்தது. பின்னர் இக்கூட்டணியின் பெயர் தமிழர் விடுதலைக் கூட்டணி என மாற்றப்பட்டது. ஆனால் 2004ஆம் ஆண்டில் கூட்டணியில் ஏற்பட்ட முரண்பாடுகள் காரணமாக தமிழர் விடுதலைக் கூட்டணியின் அப்போதைய தலைவராக இருந்த வீ. ஆனந்தசங்கரி பிரிந்து சென்றதையடுத்து இலங்கைத் தமிழரசுக் கட்சி மீண்டும் புதுப்பிக்கப்பட்டது.


தாம் தமது கட்சிகளைப் பலப்படுத்த வேண்டிய நிலைக்கு தயாராகுவார்கள் என்று ஏற்கனவே சுரோஷ் பிரேமச்சந்திரன் போன்றோர் கூறியுள்ளனர்.

இவ்வாறான நிலமைகளால் மிகவும் புத்திசாலித்தனமாக நடந்துகொள்ள வேண்டிய தேவை தமிழரசுக்கட்சித் தலைவர் சம்மந்தனுக்கு ஏற்பட்டுள்ளது எனலாம். ஏனெனில் இப்போது தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்களே அவர்களுக்கெதிராக செயற்படும் நிலைமை உருவாகியிருக்கிறது. இது அரசின் திரைமறைவிலான செயற்பாடுகள் என்று இலகுவாகவே தெரிகின்றது.


மேலும் தற்போது இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கும், வடக்கை அபிவிருத்தி செய்வதற்கும், தம்முடன் இணைந்து பணியாற்ற முன்வருமாறு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனுக்கும், வடக்கு மாகாண முதல்வர் சி.வி.விக்னேஸ்வரனுக்கும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அழைப்பு விடுப்பதன் மூலம் அதற்கான கதவுகளை மெல்லத்திறக்கலாம் என்று அரசாங்கம் கருதுகிறது. அதைவிட கடந்த காலங்களில் தமிழர்களை அரசாங்கம் தமது தேவைகளுக்கே பயன்படுத்தி வந்துள்ளது. இதனால் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு இது தொடர்பில் அலட்டிக் கொள்ளாதிருக்கிறது.




# அன்று புலிவாலைப் பிடித்தார் சம்மந்தன்- இன்று சம்பந்தன் வாலைப் பிடிக்காதவர்களுக்கு கட்சியில் இடமில்லை









போன்று தன்னை நிலைப்படுத்திக் கொண்டிருக்கிறது.

நடைபெற்று முடிந்துள்ள வடமாகாணசபைத் தேர்தலில் கூட இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சார்பில் 14 உறுப்பினர்களும், ஈ.பி.ஆர்.எல்.எப் கட்சியின் சார்பில் 6 உறுப்பினர்களும் டெலோ அமைப்பின் சார்பில் 5 உறுப்பினர்களும், புளொட் அமைப்பின் சார்பில் 2 உறுப்பினர்களும், தமிழர் விடுதலைக் கூட்டணியின் சார்பில் ஒரு உறுப்பினரும், உட்பட மொத்தமாக 30 பேர் தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் உறுப்பினர்களாக வடமாகாண சபையில் இடம்பெற்றுள்ளனர்.

இதில் வேளாண்மை, கால்நடை, நீர்ப்பாசனம், சூழல் அமைச்சராக யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த ஈ.பி.ஆர்.எல்.எப் கட்சியின் பி.ஐங்கரநேசன், கல்வி, கலாச்சார அமைச்சராக கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தி.குருகுலராஜா, சுகாதார அமைச்சராக வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வைத்திய கலாநிதி. பி.சத்தியலிங்கம், மீன்பிடி, போக்குவரத்து, கிராம அபிவிருத்தி அமைச்சராக மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த டெலோ அமைப்பின் டெனீஸ்வரன், ஆகியோர் அமைச்சரவையில் இடம் பெற்றிருக்கின்றனர்.

இந்நிலையில் அன்று வேறு வழியில்லை என்ற காரணத்துக்காக விடுதலைப்புலிகளுடன் இணைந்து செயற்பட்ட சம்மந்தன் உட்பட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அனைத்து உறுப்பினர்களும் இன்று தமிழ்மக்களுக்கான சமாதானம் என்ற தேவையின் கீழ்ஒரு அணியாகச்செயற்பட ஆரம்பித்துள்ளனர். எனினும் தேர்தல் காலத்திலிருந்து இவ்வியக்கங்களைச் சேர்ந்த உறுப்பினர்களுக்கும், தமிழரசுக் கட்சிக்குமிடையில் ஏற்பட்ட முரண்பாடுகள் பற்றியும் நாம் ஏற்கனவே அறிந்திருக்கின்றோம். இந்நிலையில் அரசாங்கம் தமிழரசுக்கட்சியைப் பயன்படுத்திக் கொண்டு ஏனைய இயக்கங்களை ஓரங்கட்ட நினைப்பதாக இன்று இக்கட்சியின் தலைவராக திரு சம்மந்தன் விளங்குகிறார். இதைப்போல அரசியல் அனுபவமும் கைவரப் பெற்றவர் இவராவார்.

இந்நிலையில் தமிழத்தேசியக் கூட்டமைப்பைசிதைக்கும்நடவடிக்கைகள் திரைமறைவில் நடைபெற்று வருகின்றன. தமிழரசுக்கட்சியின் உறுப்பினர்களான சம்மந்தன், மற்றும் மாவை சேனாதிராஜா, சுமந்திரன் போன்றோர் இலங்கை அரசாங்கத்துக்கு ஆதரவாளர்களாக செயற்படுகிறார்கள் என்ற பேச்சு அண்மைக்காலமாக அரசியல்அரங்கில் அடிப்பட்டுக் கொண்டிருக்கிறது. அத்துடன் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பில் இருக்கின்ற ஏனைய பங்காளிக் கட்சிகள் தமிழரசுக்கட்சியை விஞ்சி விடக் கூடாதென்பதற்காக தமக்கு கிடைத்த வடக்குமாகாண சபையில் தம்முடன் ஒத்துழைக்கக் கூடிய பங்காளிக்கட்சி மாகாண சபை உறுப்பினர்களுக்கு மாத்திரம் பொறுப்புக்களை வழங்கி ஏனையோரை ஓரங்கட்ட முற்படுகின்றது என்ற குற்றச்சாட்டும் ஏனைய பங்காளிக்கட்சிகளினால் நாளுக்கு நாள் வெளிப்படுத்தப்பட்டு வருகிறது.

இதற்கு உதாரணமாக உள்ளூராட்சி சபைக்கான வரவு வரவுசெலவுதிட்டம் உறுப்பினர்களுக்கிடையிலான குத்துவெட்டுக்கள், முரண்பாடுகளின் தொடர்ச்சியாக வடக்கிலும், கிழக்கிலுமாக தமிழ் தேசியக் கூட்டமைப்பின் இரு பிரதேச சபைகளின் வரவு செலவுத்திட்டம் ஆளும்தரப்பு உறுப்பினர்களாலேயே தோற்கடிக்கப்பட்டிருக்கிறது. அத்துடன் தமிழ் மக்களுக்கான நன்மையைப் பெற்றுக்கொடுப்பதற்காக அரசுடன் குறைந்தபட்ச இணக்கத்துக்கு சென்றால் அது ஏனையவர்களிடம் தவறான கருத்துக்களை உருவாக்கிவிடும். அவர்கள் அரசின் அடிவருடிகளாக மாறிவிட்டனர் என்று பேசப்படும். அவற்றை விளங்கப்படுத்த முற்பட்டால் அவையும் பின்னர் தவறாகவே புரிந்து கொள்ளப்படும் என்று கூறப்படுகிறது. தவிரவும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பில் இணைந்திருக்கும் ஏனைய கட்சிகளைச் சேர்ந்தவர்கள் சூழ்நிலை ஏற்பட்டால் விடுத்துள்ளார். நாடாளுமன்றத்தில் வரவு-செலவுத் திட்ட விவாதத்தின் நிறைவில் பதிலுரை ஆற்றியபோதே அவர் இந்த அழைப்பை விடுத்துள்ளார். கூடவே இன்னொரு விடயத்தையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். வெளிநாடுகளிடம் தீர்வைத் தேடித் திரிய வேண்டாம் என்றும், உள்நாட்டில் தீர்வைப் பெறுவதற்கு முன்வருமாறும் அவர் குறிப்பிட்டிருந்தார். இதுபோன்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும், அவரது அரசாங்கமும் அழைப்பு விடுப்பது ஒன்றும் இது தான் முதன் முறையல்ல.

ஆனால், இதற்கு முந்திய அழைப்புகள் விடுக்கப்பட்ட காலச் சூழலுக்கும் தற்போதைய சூழலுக்கும் இடையில் வேறுபாடுகள் உள்ளன. ஏனெனில் 2014ஆம் ஆண்டு இலங்கைக்கு முக்கியத்துவம் வாய்ந்த ஓர் ஆண்டாக அமையும் என்று கருதப்படுகிறது . இந்நிலையில் அரசாங்கத்திடம் இருந்து வந்துள்ள பேச்சுக்கான அழைப்புக் குறித்து, பல்வேறு சந்தேகங்களும், கேள்விகளும் எழுந்துள்ளன.

ஏனென்றால், இதுவரை அரசாங்கம் தமிழர் பிரச்சினையை நியாயமாகத் தீர்க்கவேண்டும் என்ற உறுதிப்பாட்டுடன் செயற்படவோ, அதற்கான முயற்சிகளில் ஈடுபடவோ இல்லை. விடுதலைப் புலிகளை அழிக்கும் வரை, இனப்பிரச்சினைக்கு நியாயமான தீர்வைத் தருவதாக கூறிவந்த மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கம், விடுதலைப்புலிகள் அழிக்கப்பட்ட பின்னர் தமது நிலைப்பாட்டை மாற்றிக்கொண்டது. 2011ஆம் ஆண்டு வரை இனப்பிரச்சினைக்கு உரிய தீர்வு தம்மிடம் உள்ளதாகக் கூறிவந்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, பின்னர் தன்னிடம் தீர்வு ஏதுமில்லை என்று கையை விரித்தது மட்டுமன்றி, தெரிவுக்குழுவே தீர்வைத் தேடவேண்டும் என்றும் அறிவித்தார்.

இந்நிலையில் அடுத்த ஆண்டில் ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதை அரசாங்கம் உறுதிப்படுத்தினால், தமிழர்களின் வாக்குகளை கவர வேண்டிய தேவை நிச்சயம் உள்ளது. அதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தயவை பெறுவதுதான் ஒரேவழி. தமிழ்த்தேசியக் கூட்டமைப்புடன் பேச்சுக்களை ஆரம் அத்துடன் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு இலகுவாக அரசாங்கத்தின் பொறிக்குள் சிக்கிக் கொள்ளமாட்டார்கள் என்ற நம்பிக்கை தமிழ் மக்களிடம் இருக்கிறது. வடமாகாண சபையைப் பொறுத்தவரையில் வடமாகாண ஆளுநரைவிட தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்மந்தனுக்கே அதிக மரியாதையும் முக்கியத்துவமும் இருக்கிறது. ஏனெனில் தமிழ்த்தேசிய அரசியல் வரலாற்றில் தமிழ்மக்களுடன் பயணித்தவர் என்ற வகையில் சம்மந்தன் அவர்களுக்கு தமிழ்மக்களால் வழங்கப்படுகின்ற கௌரவம் அதிகமாகவே உள்ளது.

இதனால் தமிழ்த்தேசியக் கூட்டமைக்குள் அங்கம் வகிக்கும் அனைத்துக் கட்சிகளும் என்றைக்குமே ஒற்றுமையாகவும், ஒரு தலைமையின் கீழும் இருந்து செயற்பட வேண்டிய தேவை உள்ளது. தமிழரசுக் கட்சியை விட்டுவிட்டுப் பிரிந்துபோகும் ஒரு நிலமை ஏற்படுமாகவிருந்தால் அரசாங்கத்துக்கு அதுஇருவகையிலானசாதகசூழ்நிலையை உருவாக்கும். ஒன்று ஏனைய கட்சிகளை வைத்துக் கொண்டு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு சிதைக்கப்படும். மற்றையது தமிழரசுக் கட்சியையும் காலப்போக்கில் அரசாங்கம் விலைக்கு வாங்க வேண்டிய சூழல் உருவாகும். கூட்டமைப்பாக இக்கட்சிகள் இயங்குவதனால் தான் இதன் பலம் இன்று அசைக்க முடியாத ஒன்றாக காணப்படுகிறது. அந்நிலமை மாறி ஏனைய பங்காளிக்கட்சிகள் பிரிந்து போகுமாக இருந்தால் ஏற்கனவே ஆயுதம் ஏந்திப் போராடியவர்கள் என்ற வகையிலும், அக்காலத்தில் அவர்களால் செய்யப்பட்டிருக்கக் கூடிய குற்றங்கள் தொடர்பிலும் அரசாங்கம் இலகுவாக அவர்களைத் தண்டிப்பதற்கான வாய்ப்புக்கள் உருவாகும். இதனால் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு என்ற கட்சியின் கீழ் அனைவரும் ஒன்றிணைந்து செயற்படுவதே காலத்தின் தேவை ஒன்றாக கருதப்படும்.

08 ஆம் பக்கம் பார்க்க...

நெற்றிப்பொறியன்

# பிராந்தியச் செய்திகள்




## வவுனியா தெற்கு தமிழ் பிரதேசசபை ஊழியர்களின் தொடர் வேலைநிறுத்தப் போராட்டம்



வவுனியா பிரதேசத்தில் உள்ள உள்ளூராட்சி மன்றங்களின் ஊழியர்கள் தாம் பணியாற்றும் உள்ளூராட்சி மன்றங்களின் முன்னால் தொடர் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இதற்கமைய வவுனியா தெற்கு தமிழ் பிரதேசசபை ஊழியர்கள் நெளுக்குளத்தில் அமைந்துள்ள பிரதேச சபை வளாகத்தில் தொடர் வேலை நிறுத்தப் போராட்டத்தை (7) ஆரம்பித்தனர்.

நீண்ட காலமாக தற்காலிக அடிப்படையில் வேலை செய்யும் சுகாதார ஊழியர்கள், சாரதிகள், வேலைப்பகுதி தொழிலாளர்கள் அனைவருக்கும் அவர்களது கல்வித் தகைமைக்கு ஏற்ப நிரந்தர நியமனம் வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து இப் போராட்டத்தில் இவர்கள் ஈடுபட்டு வருகின்றனர். தமது கோரிக்கைகள் நிறைவேற்றப்படாத பட்சத்தில் தொடர்ந்து வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடப்போவதாகவும் இவர்கள் தெரிவித்தனர்.

## கிளிநொச்சியில் இராணுவவாகனம் முதியவர் மீது மோதியது




கிளிநொச்சி ஏ9 வீதியில் அமைந்துள்ள சிங்கர் நிறுவனத்தின் முன்னால் காணப்படும் பாதசாரிகள் கடவைக் கோட்டின் நடுப்பகுதியில் கடந்து வந்துகொண்டிருந்த முதியவர் மீது வேகமாக வந்த இராணுவ வாகனம் வேகத்தினை கட்டு படுத்த முடியாமல் கடவை பகுதியில் வைத்தே முதியவர் மேல் மோதியது .

முதியவர் சுமார் 10 அடி தூரம் தூக்கிவீசப்பட்டார். பின்னர் அதே வாகனத்திலேயே படுகாயமடைந்த முதியவரை இராணுவத்தினர் ஏற்றி சென்றனர். அதன் பின்னர் மக்கள் பத்திரிகையாளர்கள் என பெருமள வானோர் அவ்விடத்தில் கூடினர் தொடர்ந்து பொலிஸ் அதிகாரிகள், இராணுவ அதிகாரிகள், விசாரனைகள் என இடம் பெற்றன. முதியவருக்கு வைத்தியசாலையில் சிகிச்சை வழங்கப்பட்டு கொண்டு இருப்பதாக இராணுவத்தினர் தெரிவித்தனர்.

இது தொடர்பிலான மேலதிக விபரங்கள் பின்னர் வெளிவரும் எனப்படுகிறது.

## மல்லாகம் புதிய நீதிமன்ற கட்டடம் திறந்துவைப்பு



மல்லாகம் நீதிமன்றத்திற்கான புதிய கட்டிடத் தொகுதி இன்று (9) பகல் 11.30 மணியளவில் பிரதம நீதிய ரசர் மொகான் பீரிஸ் ஆகியோரினால் திறந்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் பிரதம நீதி யரசர் மொகான் பீரிஸ் நீதி அமைச்சர் றவூப் ஹக்கீம், பாரம்பரிய சிறுகைத்தொழில் · அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார், யாழ் மாவட்ட மேல் நீதிமன்ற ஆணையாளர் அ.பிறேம்சங்கர், மல்லாகம் நீதிமன்ற நீதிபதிகளான சி.சதீஷ்கரன், மேலதிக நீதிபதி மொகமட் போன்றோர் மாலைகள் அணிவித்து வரவேற்கப்பட்டனர். தொடர்ந்தும் தேசியக்கொடி ஏற்றல், நினைவுப் பலகை திறந்து வைக்கும் நிகழ்வுகள் இடம் பெற்றன. பின்நீதிமன்றக் கட்டிடத்தை பிரதம நீதியரசர் திறந்து வைக்கும் நிகழ்வு இடம்பெற்றது.

### சுயதொழில் விசேடதிட்டம்

மலையகப் பகுதிகளில் காணப்படும் வளங்களைப்பயன்படுத்தி இப்பகுதிகளில் வாழும் மக்களின் பொருளாதாரத்தை மேம்படுத்த வீட்டுத்தோட்டம், கோழி வளர்ப்பு மற்றும் கால்நடை வளர்ப்பு என்பவற்றை ஊக்குவிக்கவும் இலவசமாக நாற்றுகள் மற்றும் கோழிக்குஞ்சுகள், கால்நடைகள் என்பவற்றை வழங்கவும் தீர்மானிக்கப்பட்டு அதற்கான நடவடிக்கைகளை மலையகக்கல்வி, கலை கலாசார பேரவை மேற்கொண்டு வருகிறது.

### இலவச கைநூல் விநியோகம்

இவ்வாண்டு புதிய பல வேலைத்திட்டங்களை மலையகத்தில் மேற்கொள்ள மலையகக் கல்விக் கலை கலாசார பேரவை தீர்மானித்துள்ளதாக அதன் தலைவர் தெரிவித்துள்ளார். இதன் முதற்கட்டமாக சகல முன்பள்ளிகளுக்கும் இலவசக் கைநூல் ஒன்றினை வழங்கவுள்ளதாக தெரிவித்தார். இதனைப் பெற்றுக்கொள்ள சகல முன்பள்ளி ஆசிரியர்களையும் மாணவ மாணவிகளின் பெயர் விபரங்களுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

### அங்கத்தவர்களாக இணைந் திடுங்கள்

கடந்த 2009 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட மலையகக் கல்வி கலை கலாசார பேரவை நுவரெலியா, கண்டி, மாத்தளை மற்றும் வடக்கின் சில கிராமங்களிலும் தனது சேவையை விஸ்தரித்துள்ளது. இவ்வாண்டு இப்பேரவையினால் கல்வி கலை கலாசாரம் பொருளாதாரம் ஆகிய துறைகளை அபிவிருத்தி செய்யும் நோக்குடன் பல்வேறு திட்டங்களை வகுத்துள்ளதுடன் உடனடி செயற்பாட்டையும் ஆரம்பித்துள்ளது. எனவே சமூக சேவையில் ஆர்வமுள்ளவர்களையும் சமூகத்திற்கு உதவக்கூடியவர்களையும் அங்கத்தவர்களாக இணைந்து கொள்ளுமாறு சமூக அக்கறைகொண்ட அனைவரையும் வேண்டியுள்ளது.

**(விபரங்களுக்கு 072 2895985)**

தகவல் :- சி.மல்லிகா

## சித்தியடைந்த மாணவர்களுக்கு பிரபல பாடசாலைகளில் அனுமதி மறுப்பு - ஜோசப் ஸ்டாலின்




புலமைப்பரிசில் பரீட்சையில் அதிவிசேட புள்ளிகள் பெற்ற மாணவர்கள் பிரபல பாடசாலைகளில் உயர் கல்வியினை தொடர அனுமதி மறுக்கப்படுகின்றதாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்தார்.

2009ஆம் ஆண்டு முதல் 2013ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் 05ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் கனிஷ்ட பிரிவு கல்வியினை தொடர்வதற்கு பிரபல பாடசாலைகளில் அனுமதி கிடைக்கவில்லை. இலங்கையில் 36 பிரபல பாடசாலைகள் இருக்கின்றன. அந்த பாடசாலைகளில் மாற்று வழிகளில் தரம் 6 மாணவர்கள் அனுமதிக்கப்படுகின்றார்கள். ஆனால், தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சையில் அதிவிசேட சித்தியடைந்த மாணவர்களுக்கு அப்பாடசாலைகளில் அனுமதி மறுக்கப்படுகின்றது.

இவ்வாறு பிரபல பாடசாலைகளில் அனுமதி மறுப்பதனை தடுக்குமாறு கல்வி அமைச்சின் செயலாளர், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு மற்றும் தேசிய கல்வி ஆணைக்குழுவிற்கும் கடந்த 03 ஆம் திகதி மாற்று வழி அனுமதிகளை தடுக்குமாறும், அவ்வாறு அனுமதி வழங்கும் அதிபர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறும் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் மேலும் தெரிவித்தார்.

## ஆளுனரால் வழங்கப்பட்ட நியமனங்கள் இடைநிறுத்தப்பட்டுள்ளன



ஆளுநர் சந்திரசிறியின் தன்னிச்சையான அண்மைய அரச நியமனங்களை தற்காலிகமாக இடைநிறுத்த வடக்கு மாகாணசபை ஏகமனதாக தீர்மானித்துள்ளது. நடப்பாண்டிற்கான முதலாவது கூட்டம் இன்று (9) பேரவை கட்டடத்தொகுதியினில் தவிசாளர் சீ.வி.கே.சிவஞானம் தலைமையினில் இடம்பெற்றிருந்தது. அதில் ஆளுநர் சந்திரசிறியினால் வடமாகாணசபையில் நியமனங்கள் வழங்கப்படுகின்றமை தொடர்பான விடயம் சூடு பிடித்திருந்தது.

இதையடுத்தே ஆளுநரால் வழங்கப்பட்ட அட்டவணைப்படுத்தப்படாத ஆளணி நியமனங்கள் அனைத்தினையுமே உடனடியாக ஏகமனதாக வடமாகாணசபை தீர்மானத்துள்ளது.குறிப்பாக ஆளுநரது பணிப்பில் முன்னெடுக்கபட்டு வரும் உள்ளூராட்சி மன்றங்களிற்கான ஆட்சேர்ப்பினையும் தடுத்து நிறுத்தவும் தீர்மானம் நிறை வேற்றப்பட்டுள்ளது.

இதனிடையே வடக்கு மாகாணசபை அமர்வுகளில் இதுவரை நிறைவேற்றப்பட்ட எந்தவொரு தீர்மானங்களுக்கும், நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை என்று கண்டனம் தெரிவிக்கப்பட்டதுடன் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் தொடர்பில் சம்பந்தப்பட்ட திணைக்களங்களுக்கு அனுப்பிய கடிதங்களுக்கும் இதுவரை பதில் எதுவும் வழங்கப்படவில்லை என்றும் கூறப்பட்டது.

## கண்டியில் புதிய போதைப்பொருள் கண்டுபிடிப்பு



இலங்கையில் இதுவரை பாவனையில் இருந்து கண்டுபிடிக்கப்படாத புதிய வகை போதைப் பொருளை கண்டி பிராந்திய பொலிஸ் நிலையத்தின் மோசடி தடுப்பு பிரிவினர் கண்டுபிடித்துள்ளனர். கண்டியில் உள்ள பாடசாலைகளில் பயிலும் மாணவர்கள் மற்றும் பகுதி நேர வகுப்புகளுக்கு செல்லும் மாணவர்கள் இந்த போதைப் பொருளுக்கு அடிமையாகியுள்ளதாக தெரியவருகிறது.

ஹெரோயின் அல்லாத இந்த போதைப் பொருள் பாடசாலை மாணவர்கள் மற்றும் சில யுவதிகளிடம் இருந்து கைப்பற்றப்பட்டுள்ளது. கஞ்சா போதைப் பொருள் கலந்த கோகோ படவுடர் போன்ற வர்ணத்தில் இருந்த போதைப் பொருள் காணப்படுவதாகவும் இது 150 ரூபா முதல் 250 ரூபா வரை விற்பனை செய்யப்பட்டு வருவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

07 ஆம் பக்கத் தொடர்ச்சி...

அத்துடன் தற்போது தமிழரசுக்கட்சியே தமிழ்த்தேசியக் கூட்டமைப்பில் ஆதிக்கம் உடையதாக இருப்பதும் தனிப்பட்ட முடிவுகளை எடுக்கிறது என்றும் தெரிந்துள்ளபோதும் சித்தார்த்தன், செல்வம் அடைக்கலநாதன் போன்றோர் தமிழரசுக்கட்சியில் இணைந்துகொள்வதற்கான சமிக்ஞைகள் தென்படுகின்றன. அவர்களின் நிலைப்பாட்டின் படி நீங்கள் எங்களை புறந்தள்ளினாலும் போகமாட்டோம் என்ற நிலைப்பாட்டிலேயே இருக்கின்றனர். அத்துடன் சம்பந்தனைப் பொறுத்தவரையில் அவரது அரசியல் சாணக்கியம் வரவேற்கத்தக்கது. தனது வாசிக்காக தற்பொழுது விடுதலைப்புலிகளை அவதூறாக பேசுவது மக்கள் மத்தியில் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது.

சம்பந்தன் புலிவாலைப்பிடித்து எவ்வாறு அரசியல் நடத்தினார் என்பதற்குரிய ஆதாரங்கள் அனைத்தும் ஊடகங்களிடம் உள்ளது. ஒரு காலகட்டத்தில் விடுதலைப்புலிகள் கொலை செய்யும் பட்டியலிலே சம்பந்தனின் பெயரும் இருந்துவந்தது. எது எவ்வாறு இருந்தபோதிலும் இன்றைய அரசியல் நீரோட்டத்திற்கேற்ப சம்பந்தனின் அரசியல் காய் நகர்த்தல்கள் மாறியுள்ளன எனலாம்.




## கவர்ச்சி ஹீரோயினாக மாறுகிறார் ஓவியா




களவாணி படத்தில் பள்ளி மாணவியாக நடித்தவர் ஓவியா அதன்பிறகு சில படங்கள் நடித்தபோதும் மார்க்கெட் அவுட்டாக காணா மல் போனவர் மறுபடியும் சுந்தர்.சி இயக்கிய கலகலப்பு படத்தில் ரீ-என்ட்ரி கொடுத்ததுடன் கவர்ச்சியாகவும் நடித்திருந்தார்.

ஓவியாவிடமிருந்து இந்த கலக்கல் நடிப்பை எதிர்பார்க்காத இரசிகர்களுக்கு இன்ப அதிர்ச்சியாக அமைந்தது. ஆனபோதும், தொடர்ந்து கவர்ச்சியாக நடிக்க ஓவியா தயா ராக இருந்தபோதும் கொமர்சியல் படங்கள் அவருக்கு கிடைக்கவில்லை. இந்த நிலையில், மதயானைக்கூட்டம் படத்தில் நடித்த அவர் தற்போது புலிவால் என்ற படத்துக்காக மறுபடியும் கவர்ச்சி அரிதாரம் பூசியிருக்கிறார். இதேபடத்தில் இன்னொரு நாயகியாக நடித்திருக்கும் அனன்யாவை தனது கவர்ச்சியால் ஓரங்கட்டியிருப்பவர், இதன்பிறகு அதிரடி கிளாமர் ஹீரோயி-னாக மாறவும் முடிவெடுத்திருப்பதாக கூறுகிறார்.

அதனால், கொமர்சியல் டைரக்டர்களாக தேடிப்பிடித்து படவேட்டையை தொடங்கியிருக்கிறாராம் ஓவியா.

## சிம்பு - நயன்தாரா கவுண்ட் டவுண் ஸ்டார்ட்



பாண்டிராஜ் இயக்கத்தில் சிம்பு - நயன்தாரா நடிக்கும் காட்சிகளின் படப்பிடிப்பு ஆரம்பமாகியுள்ளது. வல்லவன் படத்தில் இணைந்து நடித்ததன் மூலம் நிஜ காதலர்களாக வலம் வந்தனர் சிம்பு, நயன்தாரா ஜோடி.

ஆனால் பின்பு இவர்களுக்குள் மனக்கசப்பு ஏற்பட்டு காதல் பிரேக் அப் ஆகிய நிலையில் பசங்க பட இயக்குனர் பாண்டிராஜ், சிம்பு நடிக்கும் படத்தை இயக்கி வருகி-றார். இதில் சிம்புவுக்கு ஜோடியாக நயன்தாராவை ஒப்பந்தம் செய்துள்ளார். இதற்காக பெரிய தொகை அவருக்கு சம்பளமாக தரப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பீகார் சிறுமியின் வாழ்க்கை தமிழ் சினிமாவில்



ரவி என்ற புதுமுக இயக்குனர் இயக்கி செய்து வரும் படம் என்னதான் பேசுவதோ. டி.இமான் இசை அமைத்துள்ளார். ஏ.எஸ்.செந்தில்குமார் ஒளிப்பதிவு செய்துள்ளார். இது வித்தியாசமான ஒரு படம் என்று கூறியுள்ள இயக்குனர் இது பற்றி இப்படிக் கூறியுள்ளார்.

பீகார் மாநிலம் முஸார்பூர் மாவட்டத்தில் வறுமை காரண-மாக குழந்தைகள் விற்கப்படுவது சர்வசாதாரணம். அதற்கென்றே தரகர்கள் இருக்கிறார்கள். அப்படி விற்கப்பட்ட ஒரு குழந்தையை விலைக்கு வாங்கும் ஒருவன். அதனை தமிழ்நாட்டின் குற்றாலத்திற்கு கொண்டு வந்து வளர்க்கிறான். அந்த குழநதை வளர்ந்த பிறகு அதை தவறான வழியில் பயப்படுத்துவது என்பது அவன் திட்டம். இந்தவிபரம் தெரியாமல் வளரும் அந்த குழந்தை வளர்ந்த ஆளான பிறகு தமிழ்நாட்டு இளைஞர்களுடன் நட்பாகிறது. அந்த பெண்ணின் பின்னணி தமிழ் இளைஞர்களுக்கு தெரியவரும்போது அதனை எப்படி தடுத்து காப்பாற்றுகிறார்கள் என்கிற கதை. கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு உண்மையில் நடந்த ஒரு சம்பவத்தின் அடிப்படையில் இதன் திரைக்கதை வடிவமைக்கப்பட்டுள்ளது.

தக்ஷா நகர்கார் என்ற பீகார் பெண்ணே நடித்திருக்கிறார். அவர் காதலிக்கும் தமிழ்நாட்டு இளைஞராய் விஜய்ராம் நடித்துள்ளார். பீகாரில் உள்ள கிராமத்து மக்களையும், நிஜமான குழந்தை தரகர்களையும் நடிக்க வைத்திருக்கிறோம். இமான் இசையில் பீகாரி பாடல் ஒன்றும் இடம்பெறுகிறது. தணிக்கை குழு யு சான்றிதழ் வழங்கி உள்ளது. இந்த மாத இறுதியல் ரிலீஸ் செய்ய திட்டமிட்டிருக்கிறோம் என்றார்.


## சிக்ஸ் பேக் உடலமைப்பில் அரவிந்தசாமி



தமிழ் சினிமாவின் அழகான ஹீரோக்களில் ஒருவராக இருந்தவர் அரவிந்த்சாமி. ரோஜா, தளபதி நேரத்தில் பெண்களின் கனவு நாயகன் அவர். திடீரென்று சினிமாவை விட்டு விலகியவர் பல ஆண்டுகளுக்கு பிறகு கடல் படத்தின் மூலம் ரீ-என்ட்ரி ஆனார்.

தற்போது மகேஷ் மஞ்ச்ரேக்கர் டைரக்ட் செய்யும் இந்திப் படம் ஒன்றில் நடித்துக் கொண்டிருக்கிறார். அடுத்து தான் நடிக்கும் தமிழ் படம் ஒன்றிற்காக சிக்ஸ் பேக், பொடி பில்டிங் என்று ஜிம்மே கதியாக கிடக்கிறார். அவருக்கு திமோல்தி என்பவர் பயிற்சியாளராக இருந்து மாற்றி வருகிறார். அழகன் அரவிந்த்சாமி இப்போது கிட்டத்தட்ட ஆண்அழகன் போட்டிக்கு தயாரா கிற அளவிற்கு தன்னை மாற்றிக் கொண்டிருக்கிறார்.

## சமந்தாவுக்கு கிலியை ஏற்படுத்திய காஜல்



தெலுங்கு சினிமாவில், மகதீரா, நாயக் படங்களுக்குப்பிறகு ராம்சரண்தேஜா, காஜல்அகர்வால் ஜோடிக்கு மௌசு கூடியிருக்கிறது. தொடர்ந்து அவர்களுக்காக பல படங்கள் தயாரான நேரம்பார்த்து, தமிழில், மாற்றான், துப்பாக்கி, ஆல் இன் ஆல் அழகுராஜா, ஜில்லா என வரிசையாக படங்களில் கமிட்டானதால், காஜலால் அடுத்தடுத்து ராம்சரணுடன் டுயட் பாட முடியாத நிலை ஏற்பட்டது. இருப்பினும் தொடர்ந்து ஆந்திராவுக்கு வருமாறு காஜலை ராம்சரண் கேட்டுக்கொண்டு வந்ததால் இப்போது தமிழில் படங்களை குறைத்து விட்டு ஆந்திராவில் குடியேறி விட்டார். கிருஷ்ணவம்சி இயக்கும் புதிய படத்தில் மீண்டும் ராம்சரணுடன் ஜோடி சேர்ந்திருப்பவர் மேலும் சில படங்களை கைப்பற்றி பிசியாகிக்கொண்டிருக்கிறார். அத்துடன் படத்துக்குப்படம் ஏதாவது வித்தியாசமாக செய்து (ஹெயார்ஸ்டைல்) மார்க்கெட்டை பிடிக்க திடீர் வேகம் காட்டி வருகிறார்.

காஜலின் இந்த வேகம் தற்போது ஆந்திராவில் நம்பர்வன் இடத்தை பிடித்து வைத்திருக்கும் சமந்தாவுக்கு மனத ளவில் கிலியை ஏற்படுத்தியிருக்கிறதாம். அதனால் தனது ஆஸ்தான ஹீரோவான ராம்சரணைப்போன்று மற்ற ஹீரோக்களையும் காஜல் அபகரித்துக் கொள்ளக்கூடாது என்பதற்காக, அவர்களை கெட்டியாக தன்வசப்படுத்தும் திரைமறைவு வேலை களிலும் தீவிரமடைந்திருக்கிறாராம்.

## தெலுங்கில் பின்வாங்கியது அஜித்தின் வீரம்



சிறுத்தை சிவா இயக்கத்தில் அஜீத் நடித்துள்ள வீரம் படம் வரு கிற 10ஆம் திகதி திரைக்கு வருகிறது. இதனால் தமிழகமெங்கிலும் பரபரப்பாக பப்ளிசிட்டியை முடுக்கிவிட்டுள்ளனர். தமிழில் வெளியாகிற அதே நா-ளில் வீரு டொக்கடே என்ற பெயரில் தெலுங்கிலும் வெளியிட திட்டமிட்டிருந்தனர்.

ஆனால் தமிழில் ரிலீஸ் செய்து இரு வாரங்கள் கழித்தே ஆந்திராவில் வெளியிடப்போவதாக அறிவித்துள்ளனர். காரணம் ஜனவரி 10ஆம் திகதி ஆந்திராவில் சங்கராந்தி என்பதால் அங்கு மகேஷ்பாபு, ராம்சரண் போன்றோரின் படங்கள் வெளியாகிறதாம். அதனால் பிரமாண்ட தியேட்டர்கள் அனைத்தையும் புக் செய்யப்பட்டிருப்பதால் அஜீத் படத்துக்கு எதிர்பார்த்த தியேட்டர்கள கிடைக்காததால் ரிலீஸ் திகதியை தள்ளி வைத்துள்ளனர்.

இயக்குனர் சிவா மற்றும் தமன்னா தெலுங்கில் பிரபலமானவர்கள் என்பதால் அஜித் படத்துக்கும் வெற்றி வாய்ப்புக்கள் அதிகம் என எதிர்பார்க்கப்படுகிறது.

## இளம் நாயகர்களை ஈர்க்கும் நஸ்ரியா



இளவட்ட நாயகர்களுடன் ஜோடி போடுவதில் நம்பர் வன் நடிகை யாக வலம் வருகிறாராம் நஸ்ரியா. நய்யாண்டி தொப்புள் சர்ச்சையால் மார்க்கெட் சற்றே ஆடினாலும் மீண்டும் மார்க்கெட்டில் சூடுபிடித்துவிட்டார்.

இதற்கு காரணம், அவருடன் நடித்த எல்லா ஹீரோக்களும் மீண்டும் ஜோடிசேர ஆசைப்படுகின்றனர். அந்தவகையில், நேரம் படத்தில் நிவினுடன் அறிமுகமான நஸ்ரியா மீண்டும் அவருடன் ஓம் சாந்தி ஓசானா என்ற மலையாள படத்திலும், சலாலா மொபைல்ஸ் என்ற படத்தில் துல்கர்சல்மானுடன் அடுத்தபடியாக வாய் மூடி பேசவும் என்ற படத்திலும் நடிக்கிறாராம். தற்போது பகத் பாசிலுடன் ஒரு படத்தில் நடித்து வருப வர், அடுத்து களிமண்ணு இயக்குனர் பிளஸ்ஸி இயக்கும் படத்திலும் பகத்பாசிலுடன் இணைந்திருக்கிறார்.

இதேவேளை தமிழிலும் ராஜாராணிக்குப்பிறகு ஆர்யாவுடன் மீண்டும் ஒரு படத்தில் நடிக்க இருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

## விரைவில் தி லிஜெண்ட் ஓப் ஹெர்குலஸ்



இந்த படத்தின் கதையை படப்பிடிப்பு தொடங்கியதிலிருந்தே, இரகசியமாக வைத்திருக்கின்றனர். இதனால் புராணக்கதைகளில் வரும், ஹெர்குலஸ் பற்றிய கதையா அல்லது அதே பெயரில் தயாராகும் நவீன கதையா என, ஒட்டு மொத்த ஹொலிவூட்டும், மண்டை காய்ந்து போய், கிறுக்கு பிடித்து அலைந்தது. இறுதியாக, சில நாட்களுக்கு முன் படத்தின் டீசர் வெளியான போது தான், புராண கதைகளில் வரும் ஹெர்குலஸ் கதை என்பது உறுதியானது.

புராண கதை என்றாலும் நவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்தியிருக்கிறோம். வசூலிலும் சாதனை படைக்கும் என்று கூறியிருக்கிறார் இயக்குனர் ரென்னி கர்டன். பொறுத்திருந்து பார்க்கலாம்.



# கவிதைப் பூங்கா



## விவாகரத்து

பத்து மாதம் சுமந்தாய்
இரத்த சொந்தமடி – நீ
பொருத்தம் பார்த்தபின்
மனைவியாக சேர்ந்த சொந்தமடி
அக்கா தங்கை
பந்தபாசமான சொந்தமடி – நீ
அன்பால் சேர்ந்த சொந்தமடி
மூலவேராக இருந்து
பசுமையான இலைகளாக
ஆடம்பரமாக ஆட்டம்போட – உனக்கு
கொடுத்து வைத்தவன் இவனடி
தாயவள் தெய்வமடி
தரணியில் மனைவியாக
உன்னைக் கைப்பிடித்தது
இறைவன் கொடுத்த வரமடி
விரும்பிய இடம் போனாலும்
தடை போடாதவன்
எதிர்த்து நீ பேசினாலும்
ஊமையாக மாறியவன்
காலம் மாறியதால் – உன்
கருணை உள்ளம் மாறிவிட்டதடி
கோலம் மாறியதால் – உன்
கொள்கையும் மாறிவிட்டதடி
ஏன் என்று தட்டிக் கேட்டால்
சொந்தமென்று மனைவியாக
வாழ்ந்த வாழ்க்கை புரியாமல்
என்னை நிமிர்ந்து பார்த்து
நீதிமன்றத்தில் கேட்டாள்
விவாகரத்து

அருள்ராஜ்
வவுனிக்குளம்





## யுத்தம்

விழிகளுக்கு
தெரியாமல்
இடம்பெறுகிறது
கண்ணீர்

யுத்தம்
எழுதிமுடித்த
கவிதைகளை
படிக்கும்
போது
மனிதத்தை
யுத்தம் கொழுத்தி
சாம்பலாக்கும்
வரை

எந்த
மாத்திரை போட்டு
மனச்சாட்சியை
தூங்க
வைத்தது
உலகம்

உறவுகளின்
வாழ்க்கைக்கு
சமாதிகளை
கட்டிக்கொடுத்து
விட்டு
குற்றம்
செய்யாதவனைப்
போல இங்கே
செத்துப்போய்க்
கிடக்கிறது
யுத்தம்

உயிரோவியன்

## உன் புகழ் பரவும்

ஈழ அன்னையே
உனது காவலாளிகள் சிலர்
எட்டப்பராய் மாறியதால் நீ
இருப்பிழந்து போனாலும்
கலங்காதே தாயே காலம் கனிந்து வரும்
நீ போட்ட கணக்கு
தவறாது தாயே இது ஒரு விபத்துதான்
நாளை தர்மம் வெல்லும்
தரணியில் உன்புகழ் பரவும் மீண்டும்
பரணி பாடுவோம்.

எம்.சுடர்



தைப்பொங்கல்
இந்துக்களின் இதயத்தில்
இடம்பிடித்த
தைப்பொங்கல்
இல்லமெங்கும் கோலமிடும்
இனிய தைப்பொங்கல்
இருள் நீக்கி ஒளிவீசும்
இன்பமான தைப்பொங்கல்
மக்கள் துயர்நீக்கும் தைப்பொங்கல்
என்றிருந்தோம்
ஆனால்
இவ்வருடம் எம் அனைவரையும்
ஏமாற்றி விட்டதே இயற்கை
மழையின்றி
வறுமை என்னும் பட்டினிக்குள்

சு.தேவகுமார்
செட்டிகுளம்

## பெரும்பான்மை


பெரும்பான்மைக்கு முன்னால்
நாம் எப்போதும் சிறுபான்மையே
சிறுபான்மை தனியாகச்
சென்றால் நாமும்
பெரும்பான்மையே
சமபலம் நிலவினால் சிறுபான்மை
பெரும்பான்மை பேதம் அகலும்

வே.தவச்செல்வம்
தும்பளை

## பிரிவு


கண்ணியவள் காதல் அறிந்தும்
கரம் பிடிக்க நேரம் இன்றி
கண்ணீரை இறுதி மொழியாக்கி
கண்கள் காணாதூரம்
பிரிந்து போகின்றேன்
அவள் அருகில் இருந்து

சா.டினேஸ்கிறிஸ்ரி
பறப்பாங்கண்டல்





# புனைகதைப் புயல்



தொடர் - 39

# முள்ளிடை முகிழ்த்த மலர்

அன்னக்கிளி

ராம்குமார் சைக்கிளில் ஏறி ஓடமுயற்சித்தான். ‘டக்டர்......டர்....’ என்ற சத்தத்துடன் ‘பெடல்’ சறுக்கி விழப்போனான். ‘சீற்’பதிவு என்பதால் சமாளித்து காலை ஊன்றிக்கொண்டான்.

“என்ன கவனம். கால்ல அடிபட்டுட்டுதோ...?”

கடைக்குள் நின்றவள் அவன் விழுந்துவிட்டான் என நினைத்து ஓடிவந்தாள்.

“அது ஒண்டுமில்லை ‘செயின்’ கழண்டு போச்சு”

“விழுந்திட்டியளோ..... அடி படயில்லையே அவசரப்பட்டு பாக்காம எடுத்துக்கொண்டு பாயிறது.”

“எனக்கு அடிபடயில்லை பேசாதேங்கோ. அதில தடி முறிச்சுத்தாங்கோ பூட்டிட்டு ஓட லாம்.”

தடியால் செயின்கவரைக் கழட்டி செயினைப்பூட்டினான். சைக்கிளை தூக்கி ‘பெடலால்’ உளக்கிப்பார்த்தான். ‘கடக்கடக்....டக்...கடக்.... ‘கடக்கடக்.... டக்...கடக்....’ சத்தடுடன் சில்லுச் சுற்றியது.

“சரி போட்டு வாறன்.”

குரலை உயர்த்திக் கூறினான். கடைக்குள் நின்றவள்....

“வடிவாய் பூட்டியாச்சோ....? ஏதோ கடுமையாய் சத்தம் கேட்டுது.”

“அது செயின் மாத்தவேணும் கொறிக்குது... இப்ப ஓட லாம் பிரச்சினையில்லை. நாளைக்கு மாத்துவம். போட்டுவாறன்.”

“அ... இப்ப போன் கொண்டு போறியளோ.? இருட்டுக்க போறீங்க.”

“ஓ....”

ராம் புறப்பட்டான். அவன் போய் நீண்ட நேரமாகியும் வரவில்லை. இருட்டத் தொடங்கியிருந்தது. தர்சாவும் ரீயூசன் முடித்துவீட்டுக்குவந்திருந்தாள். கடையை பூட்டும் நேரம் வந்ததால் வெளி யில் பரப்பி வைத்திருந்த பொருட்களை எடுத்து உள்ளே அடுக்கிவைத்தாள். மாம னாரும் பொருட்களை எடுத்துவைத்து உதவினார். மஞ்சள்த்தண்ணீர் தெளித்து விளக்கேற்றினாள். கடையை பூட்டி விட்டு வீட்டுக்குள் வந்தாள். குழந்தை அப்பம்மாவிடமிருந்து ஓடிவந்து கட்டியணைத்துக் கொண்டாள். சாப்பிட்டுக்கொண்டிருந்ததால்....

“அப்பம்மாட்ட வாங்கிச் சாப்பிடுங்க. பிள்ளையும்அம்மாவும்நித்தா கொள்ள பாய்போட்டுட்டு வாறன்.”

“ஓ...”

மீண்டும் போய் பேர்த்தியாருடன் ஒட்டிக்கொண்டாள்.

“எங்க ராம் போனவன் இன்னும் காணேல்ல...”

மாமியார் கேட்டாள்.

“விதானையாரட்ட ‘சைன்’ வாங்கீட்டு அப்பிடியே போட்டோ கழுவக்குடுத்திட்டு வாறன் எண்டு போன வர்.”

“இவனுக்கு எத்தின தரம் சொல்லுறது. இருட்டிட்டுது எங்க வாய்பாத்துக்கொண்டு நிக்கிறானோ தெரியாது, வெளிக்கிட்டா நேரத்துக்கு வரத் தெரியாது.”

மகன் மீதுள்ள பாசத்தால் இருட்டியபின்னும் அவனைக் காணவில்லை என்ற தவிப்புடன் புறுபுறுக்கத் தொடங்கினாள். தான் அனுப்பித்தானே இப்போது அவனுக்கு பேச்சு விழுகின்றது என்பதை நினைத்தபோது அவளுக்கு தன்னை அறியாமலே கவலையாக இருந்தது. அதே வேளை ராம்மீது கோபம் கோப மாக வந்தது. உடனேயே போன் எடுத்தாள்....

“கலோ....”

“ஓ.... சொல்லுங்க.. ஏதாவது வாங்கவேணுமே..?”

“இல்லை எங்க நிக்கிறீங்க.?”

எப்போதும் மரியாதையுடன் தான் கதைப்பாள். அவன் மீது பாசமும் மரியா தையும் ஏன் இனம்புரியாத அக்கறை கூட வைத்திருந்தாள். ஆனாலும் இப்போது அவளது குரல் அதட்டலாக ஒலித்தது அவனுக்கு புதிதாக இருந்தது.

“ஏன் என்ன.?”

“ஒரு வேலைக்கு போனா உடன வரத் தெரியாதோ..? எங்க நிக்கிறீங்க...”

“ஸ்ரூடியோவில’... கதைச்சுக் கொண்டிருக்கிறன். இப்ப வாறன்.”

“கதையண்டாக்காணுமே.... இருட்டினதும் தெரியாது...”

“நிலவுதானே வந்திடுவன்..”

“கதை கண்டஇடம் கைலாயம்’ எண்டு கதைக்கிறத விட்டுட்ட கெதி யாய் வாங்கோ. காலமை கடைய நான் பாக்கிறன் போயிருந்து கதைக்கலாம்.”

“ஓ....ஓ...இப்பவாறன்.”

அவள் இப்படி ஒருநாளும் தன்னைப் பேசியதில்லையே.... சினந்தது கூட இல்லையே... ஏன் இப்படி என்ன நடந்தது என்று ஒன்றுமே புரியா மல் உடனே வருவதாக கூறி ‘கட்’ செய்தான்.

இன்றுதான் இப்படி நடக்குது என்றில்லை. சிலவேளைகளில் ஏதாவது பொருட்கள் கொள்வனவு செய்ய,தரகு பேச என தூர இடங்களுக்கு போய் வர நேரம் சென்றால் வீட்டில் இப்படித்தான் அம்மா அர்ச்சனை தொடங்கிவிடுவாள். அப்போதெல்லாம் அவன் பாவம் என்று மட்டும் யோசிப்பவள் இன்று, தன் வேலைக்காக அவனை அனுப்பியதால் தன்னால்த்தான் பேச்சு விழுகிறது என மனம் வெதும்பினாள். ராம் இப்படி அலைவதைப்பார்த்து...

“மோட்டைச்சைக்கிள் எடுங் கோவன்... உப்பிடி கனதூரம் எவ்வளவு நாளுக்கு சைக்கிள் ஓடப்போறியள்.”

“எனக்கு இப்ப என்னத்துக்கு.”

என்று மறுத்தான்.

“ஆட்டோக்கு குடுக்கிற காசு மிச்சம் வரும்”


அம்மா கிளினிக்போறது, அப்பா எங்காவது போவது, பிள்ளையை வைத்தியசாலை கொண்டு போவது, என கணக்குப்பார்த்தால் மாதம் பல ஆயிரம் செலவாகிறது என்று கணக்குப்போட்டுக்காட்டினாள்.

“இம்... காசுக்கென்ன செய்யிறது. ஆறுதலாப்பாம்.”

என்று அப்போது மறுத்தான். அன்று தொடக்கம் அவன் குழந்தையின் பேரில் வைப்பிலிட கொடுக்கும் பணத்தில் பாதியை தன் பெயரில் வைப்புச்செய்ததுடன் தான் கட்டும் சீட்டையும் எடுக்காமல் காத்திருந்தாள். எப்படியாவது மோட்டார்சைக்கிள் எடுத்துவிட்டால் அவனது கஸ்ரம் குறைந்திடும் என நினைத்திருந்தாள். ஆனால் இதுவரை அதற்கு சந்தர்ப்பம் கிடைக்கவேயில்லை.

வழமையைவிட இன்று வர நேரமாகிவிட்டது. தமிழுக்கும் நித்திரை வந்துவிட்டது. வழமையாக படுக்கும் இடத்தில் படுக்கவைத்தாள். தர்சாவும் தனக்கு தலையிடிப்பதாக கூறி குளிசை போட்டுவிட்டு பக்கத்திலேயே படுத்துக்கொண்டாள். அம்மாவும் படுக்கையை கொண்டுவந்து போட்டுவிட்டு மகனைக் காணவில்லை என்று யோசித்துக்கொண்டு வாசலில் அமர்ந்திருந்தாள். அப்பாவும்ஏதோசெய்து கொண்டிருந்தார். வெளிக்கிடுவதாக போனில் கூறி அரைமணித்தியாலத்துக்கு மேலாகியும் அவன் வரவில்லை.

பிள்ளையுடன் படுத்திருந்தபோதும் அவன் வராதது பற்றிய நினைவாகவே இருந்தது. நேரம் போகப்போக கோபம் தான் வந்தது. போன் எடுக்கலாம் என்றால் குழந்தை அழுததால் போனை எடுக்காமல் வந்துவிட்டாள். எழும்பிப்போய் எடுக்கவும் முடியவில்லை. பிள்ளை நித்திரைகொள்ளாமல்பாலைக்குடித்தபடி விளையாடிக்கொண்டிருந்தாள். தர் சாவும் படுத்தவுடனேயே அயர்ந்து தூங்கியிருந்தாள். போன் எடுத்து கண்டபடி பேசவேணும் போல இருந்தது. மாமி இவளை பேசமாட்டார் என்றாலும் அவனைப்போசுவது தன்னால்த்தானே என்று மனம் நொந்து கொண்டாள்.



“சைக்கிலுக்கு லைட்டுமில்லை இவ்வளவு நேரமாய் என்ன செய்யிறான். வாறன் எண்டு சொல்லி எவ்வளவு நேரமாயிட்டுது.”

“வீட்டுக்கு நேரத்துக்கு வரத்தெரியாது. எல்லாம் உங்களமாதிரித்தான் ஒரு பொறுப்பில்லை.”

“இம் எல்லாம் நீ குடுத்த செல்லம்தான்.”

மாமனும் மாமியும் தங்களுக்குள் வாக்கு வாதப்பட்டனர். இன்னும் கொஞ்சநேரம் சென்றால் அங்கு சண்டையே அரம்பமாகிவிடும் என நினைத்தாள். மெல்ல அசைந்து பிள்ளை நித்திரையோ என பார்த்தாள். பிள்ளையின் வாயிலிருந்து மெதுவாக முலையை வெளியே எடுத்தாள். பிள்ளை அப்படியே மறுபக்கம் புரண்டுபடுத்தாள். போர்வையை எடுத்து வடிவாக போர்த்திவிட்டு, எழுந்து போய் போன் எடுக்கவேண்டும் என நினைத்து போர்வையை எடுத்தாள். பெரும் சத்தத்துடன் அவனது சைக்கிள் வந்து நின்றது. இப்போது வெளியில் போனால் இருக்கிற கோபத்தில் ஏதாவது பேசவேண்டிவரும் என்பதால் அப்படியே படுத்திருந்தாள். தாயிடம் ஏதோ காரணம் கூறி சமாளித்தான்.

“இதில சைன் வேண்டின கடிதம் கிடக்கு வையுங்கோ. கால்முகம் கழுவிட்டு வாறன், சாப்பாட்டை போடுங்கோ.”

நிலமையை சமாளித்துவிட்டான் என்பது புரிந்தது. ஆயினும் ஏன் நேரம் சென்றது என்பதை அவன் கூறவில்லை. காரணமில்லாமல் நேரம் தாழ்த்தியிருக்கமாட்டான் என்பது அவளுக்கு தெரியும். காரணத்தை கேட்க இப்போது நேரம் சரியில்லை. ஆயினும்...

அவள் வருவாள்...



# ஆன்மீக உலகம்



## கிறிஸ்துவைப் பெற்றுக்கொள்வது எப்படி?



* நான் ஒரு பாவி என ஒப்புக்கொள்ளுங்கள்.
* பாவங்களினின்று விலக ஒப்புக்கொடுங்கள் (மனம் திரும்புதல்).
* இயேசு கிறிஸ்து உங்களுக்காக சிலுவையில் மரித்து, பின் உயிர்த்தெழுந்தார் என்பதை விசுவாசியுங்கள்.
* ஜெபத்தின் மூலம் இயேசுவை உங்களுள் வரவழைத்து உங்கள் வாழ்க்கை பரிசுத்த ஆவியின் மூலம் வழிநடத்தப்பட ஒப்புக்கொடுங்கள் (அவரையே ஆண்டவராகவும் வாழ்வின் மீட்பராகவும் ஏற்றுக்கொள்ளுங்கள்)

**என்னவென்று ஜெபிப்பது?**

அன்புள்ள இயேசு ஆண்டவரே, நான் பாவி என்பதை அறிவேன் உமது மன்னிப்பு எனக்கு வேண்டும். எனது பாவங்களுக்காக நீர் மரித்தீர் என்பதை நான் விசுவாசிக்கிறேன். அந்தப் பாவங்களினின்று வெளியேவர நான் விரும்புகிறேன். இப்போது உம்மை என் உள்ளத்திலும் என் வாழ்விலும் வரவேற்கிறேன். உம்மை எனது ஆண்டவராகவும் எனது இரட்சகராகவும் நம்பி என் வாழ்வில் உம்மை பின்பற்ற வாஞ்சிக்கிறேன். உமது ஒப்பற்ற நாமத்தினாலே, ஆமென்.

**நித்திய வாழ்வுக்கான தேவனின் வாக்குறுதி**

நீங்கள் இவ்வாறு ஜெபித்து இயேசு கிறிஸ்துவை விசுவாசிப்பீர்களானால் நித்திய வாழ்வு உங்களுக்கு நிச்சயம் என பைபிள் உறுதியளிக்கிறது. “ஆதலால் கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ளுகிற எவனும் இரட்சிக்கப்படுவான்” (ரோமர் 10:13)

“கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள் இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனால் உண்டானது. ஒருவரும் பெருமைபாராட்டாதபடிக்கு இது கிரியைகளினால் உண்டானதல்ல.” (எபேசியர் 2:8-9)

இயேசுவை நாம் ஏற்றுக்கொண்டால், விசுவாசிக்கும் ஒவ்வொரு மனிதரினுள்ளும் வசிக்கும் பரிசுத்த ஆவியானவரின் இயற்கைக்கு அப்பாற்பட்ட செயலினால் நாம் மறுபடியும் தேவனின் குடும்பத்தில் பிறக்கிறோம். இதுவே மறுவாழ்வு அல்லது புதிய பிறப்பு என்பதாகும்.

## இஸ்லாமிய இறையன்பு



ஒரு நாள் ஸெய்யதுனா ஈஸா (அலைஹிஸலாம்) பிரயாணம் செய்து கொண்டு இருந்தனர். அப்போது வழியில் வாடிய வதனத்துடன் சிலர் இறைவனை வணங்கி கொண்டு இருந்தனர். “நீங்கள் யார்? உங்களின் இந்த நிலைக்கு என்ன காரணம்” என்று வினவினர் செய்யதுனா ஈஸா (அலைஹிஸலாம்) அவர்கள்.

அதற்கு அவர்கள் “நரக நெருப்புக்கு நாங்கள் அஞ்சுகிறோம். அதனால்தான் உடலை வருத்தி இறைவனை வணங்கி கொண்டு உள்ளோம்” என்றனர். அதற்கு ஸெய்யதுனா ஈஸா (அலைஹிஸலாம்) அவர்கள் “நரக நெருப்புக்கு அஞ்சியாவது வணக்கம் புரிகிறீர்களே. அல்லாஹ் உங்களை நரக நெருப்பில் இருந்து பாதுகாப்பானாக” என்று பிரார்த்தித்துவிட்டு அவ்விடம் விட்டு அகன்றனர்.

செல்லும் வழியில் இன்னும் சிலரை கண்டார்கள். அவர்களின் உடல் இளைத்து வெளுத்து காணப்பட்டனர். “நீங்கள் யார்? உங்களின் இந்த நிலைக்கு என்ன காரணம்” என்று வினவினர் ஸெய்யதுனா ஈஸா (அலைஹிஸலாம்) அவர்கள். அதற்கு அவர்கள் “நாங்கள் சுவர்க்கத்தை ஆசை வைக்கிறோம். சுவனம் செல்ல வேண்டும் என்ற ஆவலினால் உடலை வருத்தி இறைவனை வணங்கி கொண்டு உள்ளோம்” என்றனர்.


அதற்கு ஸெய்யதுனா ஈஸா (அலைஹிஸலாம்) அவர்கள், “வருந்தாதீர்கள், உங்களுக்கு சுவனம் கிடைக்க வேண்டுமாயின் இந்த வணக்கத்தினால்தான் கிடைக்க வேண்டும் என்றில்லை. ஆனாலும் அல்லாஹ் உங்களின் விருப்பத்தை நிறைவேற்றி வைக்க போதுமானவன்” என்று பிரார்த்தித்துவிட்டு அவ்விடம் விட்டு அகன்றனர்.

மீண்டும் நடையை தொடர்ந்தனர். அப்போது இன்னும் சிலரை கண்டனர். அவர்கள் நடை பிணங்களை போன்று காட்சியளித்தனர். “நீங்கள் யார்? உங்களின் இந்த நிலைக்கு என்ன காரணம்” என்று வினவினர் ஸெய்யதுனா ஈஸா (அலைஹிஸலாம்) அவர்கள்.

அதற்கு அவர்கள் “நாங்கள் நரகத்திற்கு அஞ்சவுமில்லை, சுவர்க்கத்தை விரும்பவும் இல்லை, அல்லாஹ்வின் நாட்டப்படி எது கிடைத்தாலும் அதனை ஏற்றுகொள்கிறோம். ஆனால் அல்லாஹ்வின் அன்பு எங்களின் உள்ளத்தில் ஆட்சி செய்கிறது. அதுவே எங்களை இவ்வாறு மாற்றியமைத்துவிட்டது” என்றனர்.

அதனை கேட்ட ஸெய்யதுனா ஈஸா (அலைஹிஸலாம்) அவர்கள் மிக்க மகிழ்ந்தார்கள். “நீங்கள்தான் தன்னல நோக்கமின்றி தவம் செய்யும் தூயவர்கள். நீங்கள்தாம் இறையண்மையை எய்தப்பெற்றவர்கள்” என்று மூன்று முறை கூறிவிட்டு அவ்விடம் விட்டு அகன்றனர்.

## நாம் ஏன் ஒவ்வொரு கிழமையும் கோயிலுக்கு செல்ல வேண்டும்?



நமது ஆத்ம தன்மையுடன் தொடர்பு கொள்ளவும், ஆத்மாவின் இயற்கை ஆனந்தமயமான தன்மையை அனுபவிக்கவும் ஒரு பாரம்பரிய வழியாக கோயில் வழிபாட்டை இந்து மதம் நமக்கு வகுத்துள்ளது. அதிருப்தியான ஒரு மனநிலையில் கோயிலுக்குச் சென்று, கடவுள் மற்றும் தெய்வங்களின் ஆசீர்வாதங்களால், உந்தப்பட்டு, சந்தோஷமாக வீடு திரும்பலாம்.

எவ்வாறு இது சாத்தியம்? தெய்வத்தின் ஆசீர்வாதங்கள் மனதை ஒழுங்கு செய்து, மற்றும் பிரபாமண்டலத்தின் அடைபட்ட எண்ண ரூபங்களையும் உணர்ச்சிகளையும் சுத்தி செய்து, ஒருவனை மீண்டும் தத்தம் உள்ளார்ந்த சுயத்துடன் தொடர்பு கொள்ளச் செய்கின்றன. இந்த ஆசீர்வாதங்கள் அவர்களை பிறவிக்குண தன்மைகளில் இருந்து மேல்தூக்கி, புத்தி தன்மையை மென்மையாக்கி, தத்தம் ஆன்மீக தன்மைக்கு இட்டுச் செல்கின்றன.

சிறுவர்கள் கோயில் வழிபாடானது சங்கடமான உணர்ச்சிகளை ஸ்திரமாக்கும் கருவி என்ற உண்மையை உணரும் போது, தாமாகவே குடும்பத்தினருடன்சேர்ந்து கோயிலுக்குச் செல்ல விரும்பத் தொடங்குவர். பிள்ளைகளுக்கும் கோயில் ஒரு முக்கியமானதாக தோன்றும், வெறும் தாயுக்கும் தந்தைக்கும் உரித்தானதென இல்லாமல். கோயில் வழிபாடு அவர்கள் மிகக் கஷ்டமான சூழ்நிலைகளிலும் சாந்தமாகவும் நடு நிலையாகவும் இருக்க உதவும். சரியான உத்வேகத்துடன் செல்வதே தம்மை மீண்டும் சரி செய்வதற்கான வழி என்பதை சிறுவர்கள் கண்டு கொள்வர். நீண்ட காலமாக தேக்கி வைக்கப்பட்டிருந்த காயங்களுக்கும் கோயில்கள் நிவாரணம் வழங்குகின்றன.

இந்த பூலோகத்தில் ஒரு சக நண்பனிடம் பேசுவது போலவே, கோயிலுக்குச் சென்று, தெய்வத்தின் திருவடியில் பிரச்சினைகளை வைத்துவிட்டு, அன்பளிப்புகளை கொடுத்து, தெய்வத்துடன் சங்கடங்களை சொல்ல வேண்டும் என சிறுவர்களுக்கு போதனை செய்ய வேண்டும். அங்கே, தெய்வத்துடன், ஆழமான, உள்ளார்ந்த செயல்பாடு ஒன்றில் ஈடுபட்டு, அந்த தெய்வத்திடம் இருந்து ஆசீர்வாதங்களை பெறுவது, சரியான முறையில் அணுகப்படும் பட்சத்தில் மட்டுமே. அவர்கள் கோயிலை விட்டு வெளியேறும் போது, ஒரு வேளை உறுத்திய பிரச்சினை யாது என்பது என்ற நினைவு கூட தமக்கு இருக்காது. இது ஒரு வெற்றிக்கான அடையாளம்.

வாரம் ஒரு முறை கோயிலுக்குச் சென்று பயனடைவது, சங்கடமான காலக் கட்டத்தில் மட்டுமல்ல. வாழ்க்கையில் அனைத்தும் நலமாக இருக்கும் வேளையில் கூட, உளமாரவும், மிக்க கவனமுடனும் கோயிலில் வழிபாடு செய்வது, ஒருவனை தனது ஆத்ம தன்மையின் ஆழத்திற்கு இட்டுச் செல்லும்.

சிறுவர்கள் மேலும் கருணையுள்ளவர்களாகவும், அதிக புரிந்துணர்வு உடையவர்களாகவும் வளருவர். வாழ்க்கையில் தோன்றும் சவால்களை மேலும் திறமுடன் எதிர்கொள்வர். வெறுமனே பெரியவர்களின் பலவிதமான விதிமுறையில் இதுவும் ஒன்று அல்ல, ஆனால் வழிபாடானது ஓர் சக்தி வாய்ந்த இந்துக் கருவி என உங்கள் குழந்தை தெரிந்து கொள்ளும் பட்சத்தில், அவர்கள் தம்மை ஒவ்வொரு வாரமும் கோயிலுக்கு அழைத்துச் சொல்லும்படிக் கேட்பார்கள்.

### வாழ்க்கையை மேம்படுத்த வெற்றிப்படி தரும் நற்சிந்தனைகள்

01. அதிகம் செய்வது சிறந்தது என்ற கருத்தை மாற்றிக் கொண்டு, குறைவாக செய்வதில் நிறைய பலன் உண்டு என்று நினைத்து நடவுங்கள், வாழ்வில் மகிழ்ச்சி ஆரம்பித்துவிடும்.

02. தினமும் மூன்று என்று திட்டமிட்டு காரியங்களை செய்து வந்தால் அதிசயிக்கக் கூடிய வெற்றியை எட்டித் தொட்டிருக்கக் காண்பீர்கள். முடித்தாக வேண்டிய பணிகளில் முதல் மூன்றை தேர்வு செய்து முடியுங்கள் என்பது இதன் கருத்து.


03. தேவையில்லாத விடயங்களை அங்குலம் அங்குலமாக யோசித்து, யோசித்து அலட்டிக் கொள்வதால் காலமும் நேரமும் விரயமாகிறதே அல்லாமல் வேறெதுவும் நடப்பதில்லை என்பதை உணர்ந்து கொள்ளுங்கள்.

04. அச்சத்தினால் ஒத்திப் போடும் பழக்கமே உங்கள் பகைவனாகும். அதை நிர்மூலம் செய்வதில்தான் வெற்றி தங்கியுள்ளது.


05. வாழ்க்கையில் சின்னச் சின்ன விடயங்கள் கூட பெரிய பெரிய சந்தோசத்தை அள்ளித்தரக் கூடியவை. அன்றாட வாழ்வில் சின்னச்சின்ன விடயங்களை முடிப்பதன் மூலம் பெரிய சந்தோசத்தை அனுபவிக்க முடியும்.

06. நமது மனோ நிலையில் பொதிந்துள்ள ஆற்றல்தான் முடிவைத் தீர்மானிக்கப் போகிறது. ஆக்கபூர்வமான எதிர்பார்ப்பை தெரிவு செய்யுங்கள், வெற்றியை எதிர் பாருங்கள். ஆனால் வெற்றி நாளை வருமென்று மனதிற்கு தகவல் கொடுக்காதீர்கள். வெற்றி இதோ இதைப்படிக்க வந்திருக்கிறீர்களே இக்கணம்தான் வெற்றி.

07. உங்கள் மீது நம்பிக்கை வையுங்கள், உங்களின் உள்ளேயுள்ள திசைகாட்டியின் வழியே நடவுங்கள். அதுதான் உள்ளிருப்பதை வெளிக்காட்டி வெற்றிகொள்ளும் வழிமுறையாகும்.



# அறிவியல் உலகம்




## யூகலிப்டஸ் இலைகளில் தங்கம் - ஆஸி விஞ்ஞானிகள் கண்டுபிடிப்பு



பூமிக்கு அடியில் தங்கப் படிவங்கள் நிறைந்த பகுதிகளில் விளையும் யூகலிப்டஸ் மரங்களின் இலைகளில் தங்கம் படிந்திருப்பதாக அவுஸ்திரேலிய விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த கொமன்வெல்த் அறிவியல் மற்றும் தொழில் ஆராய்ச்சி நிறுவனம், வறட்சி காலங்களில் ஈரப்பதத்தைத் தக்கவைப்பதற்காக பூமியின் ஆழத்திலிருந்து தங்கத்துடன் கூடிய தண்ணீரை மரங்கள் உறிஞ்சி எடுக்கின்றன என்று கண்டறிந்துள்ளது.

அவுஸ்திரேலியாவின் தங்கப் படிவங்கள் நிறைந்த கல்கூர்லீ பகுதியில் இந்தச் சோதனை மேற்கொள்ளப்பட்டது. இது குறித்து அந்நிறுவத்தின் விஞ்ஞானி மெல்வின் லிண்டர்ன் தெரிவிக்கையில், ''ஒரு முடியின் அளவைப் போல பத்தில் ஒரு பங்கு தங்கம்தான் இலைகளில் படிந்துள்ளன. 500 மரங்களிலிருந்து ஒரு சிறிய மோதிரம் செய்யும் அளவுக்கு தங்கம் கிடைக்கும். எனினும், இந்தக் கண்டுபிடிப்பின் மூலம், தங்கப் படிவங்கள் கிடைக்கும் இடங்களை எளிதில் அறிந்து கொள்ள முடியும்" என்று தெரிவித்துள்ளார்.

## பூமியிலிருந்து மிகத்தொலைவில் உள்ள விண்மீனைச் சுற்றும் ஏலியன் கிரகம் கண்டுபிடிப்பு




நமது சூரிய குடும்பத்தில் மிகப்பெரிய கிரகமான வியாழனை விட 11 மடங்கு திணிவு கொண்டதும் பூமியை விட மிகத் தொலைவில் அமைந்திருக்கும் நட்சத்திரத்தைச் சுற்றி வலம் வருவதுமான மிகப் பெரும் ஏலியன் கிரகம் ஒன்றினை வானியலாளர்கள் சமீபத்தில் கண்டு பிடித்துள்ளனர்.

வருங்காலத்தில் வேற்றுக் கிரகவாசிகள் (Aliens) அல்லது பிற உயிரினங்கள் வாழும் சாத்தியக் கூறு உள்ள இக்கிரகம் சூரியனுக்கும் பூமிக்கும் இடையேயான சராசரித் தூரத்தை (AU) விட 650 மடங்கு அதிக வித்தியாசத்தில் தனது சூரியனைச் சுற்றி வருவதும் கணிக்கப்பட்டுள்ளது. இக்கிரகத்தின் கண்டுபிடிப்பு எவ்வாறு இத்தகைய வித்தியாசமான ஏலியன் கிரகங்கள் பிரபஞ்சத்தில் தோற்றமும் பரிணாமமும் அடைகின்றன என்பது குறித்த ஆராய்ச்சிகளுக்குப் பயனளிக்கும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் புதிதாகக் கண்டுபிடிக்கப் பட்ட இந்தக் கிரகத்துக்கு HD 106906 எனப் பெயரிடப்பட்டுள்ளது. சுமார் 13 மில்லியன் வயதுடைய இந்தக் கிரகம் இன்னமும் சூடாக இருப்பதாகவும் இதனால் சுயமாக ஒளி வீசுவதாகவும் கூறப்படுகின்றது. நமது பூமி தோன்றி 4.5 பில்லியன் ஆண்டுகள் ஆகி விட்டன என்று கணிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இதனால் இப்புதிய கிரகத்தை விட 350 மடங்கு பழமை வாய்ந்தது நம் பூமி என்பதால் நமது பூமி தோன்றிய புதிதில் அதில் எவ்வாறு புவியியல் மாற்றங்கள் ஏற்பட்டு உயிர் வாழ்க்கைக்குப் பயனுள்ளதாக அது மாறியது என்பது குறித்துக் கற்க இக்கிரகம் உதவக் கூடும் என நம்பப் படுகின்றது.

சிலியின் அட்டகமா பாலைவனத்தில் அமைந்துள்ள மகெல்லன் விண் தொலைக்காட்டியால் கண்டு பிடிக்கப்பட்ட இக்கிரகத்தின் இருப்பு விண்ணில் உலா வரும் ஹபிள் தொலைக்காட்டியாலும் நோக்கப்பட்டு உறுதி செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## முகநூலில் உணர்ச்சியை வெளிப்படுத்தும் sympathy பட்டன்




பேஸ்புக்கில் துயரமான செய்திகள், மரண வார்த்தைகளை பார்க்கும்போது தமது உணர்ச்சியை வெளிப்படுத்தலைக் கொடுக்கலாமா? என்று இனி யோசிக்க தேவையில்லை. அத்தைய சூழல்களில் இனி sympathy (இரக்கம்) பட்டனை க்ளிக் செய்வதற்கான வசதி இனி பேஸ்புக்கில் உண்டாகும்.

sad மற்றும் depressed என்ற பெயர்களில் பட்டன்கள் இடம்பெறும். விருப்பமில்லையென்றால் செய்திகளுக்கு கீழே டிஸ்லைக் பட்டன் வசதியை ஏற்படுத்துவோம் என்று பேஸ்புக் அறிவித்திருந்தது. ஆனால், இதுவரை அமுலுக்கு வரவில்லை. சோதனையின் அடிப்படையில் பேஸ்புக்கில் சிம்பதி பட்டன் இடம்பெறுகிறது.

## புதிய பயனர் இடைமுகத்துடன் GoodNews




அப்பிளின் iOS இயங்குதளத்தினை அடிப்படையாகக் கொண்ட மொபைல் சாதனங்களில் செய்திகளை உடனுக்குடன் அறிந்துகொள்ள உதவும் RSS அப்பிளிக்கேஷனான Good News இன் புதிய பதிப்பு வெளியாகியுள்ளது.

ஏனைய RSS அப்பிளிக்கேஷன்களை விடவும் Feedly, Feedbin, Feed Wrangler மற்றும் NewsBlur போன்ற வசதிகளை உள்ளடக்கிய இந்த அப்பிளிக்கேஷன் ஆனது புதிய பயனர் இடைமுகம் உட்பட மேலும் சில புதிய வசதிகளை உள்ளடக்கியதாக வெளியிடப்பட்டுள்ளது.

இவற்றுடன் Facebook, Twitter, Tumblr, Flickr, 500px, Linkedin, Vimeo, Instagram, Soundcloud, Readability, Pocket, Delicious போன்ற சமூகவலைத்தளங்களை உள்ளடக்கியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## புதிய குரோம்புக் கணினியை அறிமுப்படுத்துகிறது Acer



Acer நிறுவனம் C720P எனும் தொடரிலக்கத்தினைக் கொண்ட குரோம்புக் மடிக்கணனிகளை அறிமுகம் செய்கின்றது. 299 யூரோக்கள் பெறுமதியான இக்கணனியினை முதலில் ஐரோப்பிய நாடுகளான சுவிட்ஸர்லாண்ட், ஜேர்மனி, இலண்டன், பிரான்ஸ் நெதர்லாண்ட், ஸ்வீடன், பின்லாந்து மற்றும் ரஷ்யா ஆகியவற்றில் அறிமுகம் செய்யவுள்ளது.

இக்கணனிகள் 11.6 அங்குல அளவுடைய HD LED திரையினைக்கொண்டுள்ளதுடன் Intel Celeron 2955U Processor, பிரதான நினைவகமாக 2GB RAM, 32GB சேமிப்பு நினைவகம் என்பனவற்றினையும் கொண்டுள்ளது. மேலும் இவற்றின் மின்கலமானது 7.5 மணித்தியாலங்கள் வரை தொடர்ச்சியாக மின்னை வழங்கக் கூடியதாகவும் காணப்படுகின்றது.

## YouTube வழங்கவுள்ள புதிய வசதி



உலகின் முன்னணி வீடியோ பகிரும் தளமாக விளங்கும் YouTube ஆனது நாளுக்கு நாள் பல்வேறு புதிய அம்சங்களை அறிமுகப்படுத்திவருகின்றது. இவற்றின் தொடர்ச்சியாக 2014ஆம் ஆண்டில் குறைந்த இணைய வேகத்திலும் வீடியோக்களை பார்த்து மகிழும் வசதியை அறிமுகப்படுத்தவுள்ளது.

4K Streaming எனும் இத்தொழில்நுட்பத்தினை இந்த வருடம் இடம்பெறும் சர்வதேச இலத்திரனியல் கண்காட்சியில் அறிமுகம் செய்து வைக்கவுள்ளது.

அதேவேளை தொலைக்காட்சிகளில் பயன்படுத்தக்கூடிய Ultra HD 4K எனும் தொழில்நுட்பத்தினையும் YouTube நிறுவனம் 2015ஆம் ஆண்டில் அறிமுகம் செய்து வைக்கலாம் என எதிர்பார்ப்புக்கள் வெளியாகியுள்ளன.

## யாகூ இணையத்தளத்திலிருந்து மல்வேர் தாக்குதல்



பிரபல தேடுபொறிகளுள் ஒன்றாகத் திகழும் யாகூ இணையத்தில் மல்வேர்கள் காணப்படுவதாக பயனர்கள் தெரிவித்துள்ளனர். இந்த மல்வேர்கள் அனைத்தும் யாகூ தளத்திலுள்ள விளம்பரங்களை கிளிக் செய்வதன் மூலம் பயனர்களின் கணிகளுக்குள் ஊடுருவி தாக்குவதாக கூறப்படுகின்றது.

மணித்தியாலம் ஒன்றுக்கு 300,000 பேர் யாகூ தளத்திற்கு வருவதாகவும் இதில் 27,000 பேர் மல்வேர் தாக்குதலுக்கு இலக்காவதாகவும் நெதர்லாந்தை தளமாகக் கொண்டு இயங்கும் யாகூவின் இணையப் பாதுகாப்பு பிரிவு உறுதிப்படுத்தியுள்ளது.

## நுண்ணிய கணித நுட்பங்கள் மூலம் கணக்குப்போடும் தாவரங்கள்



தாவர வகைகள் தமக்கு தேவையான உணவையும் அதன் சேமிப்பையும் கணக்கிட்டே செய்கின்றன என்று ஒரு ஆய்வு முடிவில் இப்போது தெரியவந்துள்ளது.

தமது உணவுத் தேவை மற்றும் பயன்பாடு குறித்த கணக்குகளை மேற்கொள்ள தமக்குள்ளேயே ஒரு திறமையைக் கொண்டுள்ளன என்று விஞ்ஞானிகள் கூறியுள்ளனர். ஒவ்வொரு தாவரமும் இரவு நேரங்களில், தமக்கு எந்த அளவுக்கு மாவுச் சத்து தேவை என்பதை, பகல் நேரத்தில் சூரிய ஒளி இருக்கும் வேளையில், அதி நவீன நுண்ணிய கணித நுட்பங்களை பயன்படுத்தி கணக்கிட்டு சேமித்து வைத்துக்கொள்கின்றன எனப்படுகிறது.

வளர்ந்து வரும் ஒரு செடி, இலைகளில் உள்ள இராசயனங்களை வகுத்து கணக்கிடுவது உட்பட தாவரங்கள் தமது இரவுத் தேவைக்கான உணவின் அளவை நிர்ணயித்து பகிர்ந்து கொள்கின்றன என்றும இரவு நேரத்தில் சூரிய ஒளிச் சக்தியை பயன்படுத்த முடியாத சூழலில் தாவரங்கள் கரியமில வாயுவை சர்க்கரை மற்றும் மாவுச் சத்தாக மாற்ற முடியாத நிலைமையில், அதிகாலை மீண்டும் சூரிய ஒளி வரும் வரையில் தமக்குள்ளே இருக்கும் மாவுச் சத்தை திட்டமிட்டு சீராக பயன்படுத்த வேண்டியத் தேவை தாவரங்களுக்கு உள்ளது

தாவரங்கள் தமது உணவுத் தேவை மற்றும் சேமிப்பை துல்லியமாகக் கணக்கிட்டு அதற்கேற்ற வகையில் செயல்படுவதாக ஆய்வு முடிவுகள் கூறுகின்றன. தாவரங்கள் தமது மாவுச் சத்து தேவையை உணர்ந்து அதற்கு ஏற்ற வகையில் தம்மிடம் உள்ள மாவுச் சத்தை பங்கீடு செய்கின்றன என்றால், அவை துல்லியமாக வகுத்தல் கணக்குகளை செய்கிறது என்பதையே நாரிச்சிலுள்ள ஜான் இன்னஸ் மையத்தில் விஞ்ஞானிகள் நடத்திய ஆய்வில் தெரியவந்துள்ளது.

மிகவும் அடிப்படையான கணக்குகளை இரசாயன வகையில் தாவரங்கள் செய்கின்றன என்பது மிகவும் ஆச்சர்யமாகவும் வியப்பை ஏற்படுத்தும் விதத்திலும் உள்ளன என்று ஆய்வுக் குழுவின் தலைவர் பேராசிரியர் ஆலன் ஸ்மித் கூறுகிறார்.

# விளையாட்டு உலகம்

## உசைன்போல்டின் பயிற்சியாளரிடம் பயிற்சிபெறும் இந்தியவீரர்



இந்திய தடகள வீரர் அமியா மாலிக், உலகின் மின்னல் மனிதன் உசைன் போல்ட் பயிற்சியாளர் கிளன் மில்சிடம் பயிற்சி மேற்கொள்ள உள்ளார்.

ஒடிசாவை சேர்ந்த தடகள வீரர் அமியா மாலிக் (21) 200 மீ ஓட்டத்தில் தேசிய சம்பியனான இவர், கடந்த 2008இல் நடந்த யூத் கொமன்வெல்த் போட்டியின் 200 மீ ஓட்டத்தில் (21.33 வினாடி) வெண்கலப்பதக்கம் வென்றார்.

அதேஆண்டில் ரஷ்யாவில் நடந்த ஆசிய போட்டியின் (16 வயது) 100 மீ ஓட்டத்தில் தங்கப்பதக்கமும், 200 மீ ஓட்டத்தில் வெள்ளிப்பதக்கமும் வென்றார். பின் 2009இல் புனே வில் நடந்த தேசிய அளவிலான பள்ளிப்போட்டியில் அசத்திய இவர் 200 மீ ஓட்டத்தில் இந்தியாவின் நம்பர் -1 வீரராக உருவெடுத்தார். இவர் தற்போது உலகின் மின்னல் மனி தன் ஜமைக்காவின் உசைன் போல்ட், பயிற்சியாளரான கிளன் மில்சிடம் பயிற்சி மேற்கொள்ளவுள்ளார். இதற்காக வரும் 12ஆம் திகதி ஜமைக்கா செல்கிறார்.

## செரீனாவுக்கு வானம் தான் எல்லை



டென்னிஸ் அரங்கில் சூறாவளியாய் சுழன்றடித்துக் கொண்டிருக்கும் செரீனா வில்லியம்ஸை அடக்க முடியாது என ஜம்பவான் ஒருவர் புகழாரம் சூட்டியுள்ளார். அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸ், வயதானாலும் சூப்பராக விளையாடி பட்டங்களை குவித்துக் கொண்டிருக்கிறார்.

இதுவரை 17 கிராண்ட்ஸ்லாம் பட்டங்களை வென்றுள்ளவர், அடுத்த வாரம் தொடங்கும் அவுஸ்திரேலிய ஓப னில் பங்கேற்க உள்ளார். இந்நிலையில் இவரை பற்றி டென்னிஸ் ஜம்பவான் செக்கோஸ்லோவக்கியாவின் மார்ட்டினா நவரத்திலோவோ அளித்த பேட்டியில், செரீனா காயமின்றி தொடர்ந்து உடல் ஆரோக்கியத்துடன் இருந்தால், அவரால் 20 கிராண்ட்ஸ்லாம் பட்டத்திற்கு மேல் வெல்ல முடியும் என்பதில் சந்தேகமில்லை.

அவரை கட்டுப்படுத்துவது கடினம், அவருக்கு வானம் தான் எல்லை. பொதுவாக 30 வயதை கடந்து விட்டாலே அதன் பிறகு சாதிப்பது எவ்வளவு கடினம் என்பதை நான் அறிவேன். ஏனெனில் சிறு சிறு காயங்கள் கூட அப்போது மோசமாகி விடும், மோசமான தோல்விகளையும் சந்திக்க வேண்டி வரும். ஆனால் செரீனா விளையாடுவதை பார்க்கும் போது அவர் இப்போது மிகச்சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்தி வருவது தெரிகிறது. 30 வயதை தாண்டினாலும் கூட தொடர்ந்து ஜெயித்து கொண்டே இருக்க வேண்டும், சாதனைப் பயணத்தை தொடர வேண்டும் என்ற அதீத ஆர்வம் அவரிடம் இருக்கிறது என மனதார பாராட்டியுள்ளார்.

## மான்செஸ்டர் கழகத்தின் தொடர் தோல்வி



2001ஆம் ஆண்டுக்கு பின்னர் புகழ்பெற்ற மான்செஸ்டர் யுனைடட் கழகம் தொடர்ந்து மூன்று போட்டிகளில் தோல்வி கண்டுள்ளது. சண்டர் லேண்ட் அணிக்கு எதிரான போட்டியில் மான்செஸ்டர் யுனைடன் கழகம் 2 க்கு 1 என்ற கணக்கில் தோல்வி கண்டது.

இதன்படி, 2000 ஆம் ஆண்டுக்கு பின்னர், சண்டர் லேண்ட் அணி மன்செஸ்டர் யுனைனட் கழகத்தை வெற்றி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## எனது இருப்பை பலப்படுத்தியுள்ளேன்-மத்யூஸ்



பாகிஸ்தானுக்கு எதிரான முதலாவது டெஸ்ட் போட்டியில் சதத்தைப் பெற்றதன் மூலம் இலங்கை அணியில் தனது இடத்தை நியாயப்படுத்தியதாக இலங்கை அணி யின் தலைவர் அஞ்சலோ மத்தியூஸ் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தானுக்கெதிரான முதலாவது டெஸ்ட் போட்டியில் முதல் இனிங் ஸில் 91 ஓட்டங்களைப் பெற்ற அஞ்சலோ மத்தியூஸ், இரண்டாவது இனிங்ஸில் கடினமான சூழ்நிலையில் ஆட்டமிழக்காமல் 157 ஓட்டங்களைப் பெற்றார். இந்தப் போட்டியில் இலங்கை அணி வெற்றி தோல்வியின்றி முடித்துக் கொள்ள அவரது ஆட்டம் பேருதவியாக அமைந்தது. இந்த 157 ஓட்டங்கள் டெஸ்ட் இனிங்ஸொன்றில் அவர் பெற்ற அதிகமான ஓட்டங்களுமாகும்.

இந்நிலையில் கருத்துத் தெரிவித்துள்ள அஞ்சலோ மத்தியூஸ், முதற்போட்டியில் 91, 157 ஓட்டங்களைப் பெற்றதன் மூலம் அணியில் தனது இடத்தை நியாயப்படுத்தியதாக எண்ணுவதாகக் குறிப்பிட்டுள்ளார். அண்மைக்காலமாக இலங்கை டெஸ்ட் அணியில் அஞ்சலோ மத்தியூஸின் இடம் கேள்விக்குள்ளாகிக் காணப்பட்ட நிலையில், முதற்போட்டியில் தனது சிறப்பான ஆட்டம் குறித்து மிகவும் மகிழ்ச்சியடைவதாகவும், அணியிலுள்ள 6 துடுப்பாட்ட வீரர்கள் தங்களது கடமைகளை ஆற்ற வேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

## காற்பந்து ஜாம்பவான் எசிபியோ மரணம்



போர்ச்சுகல் காற்பந்து அணியின் ஜாம்பவனாக திகழ்ந்த எசிபியோ, தனது 71 வயதில் மாரடைப்பால் மரணமடைந்துள்ளார். காற்பந்து அரங்கில் சிறந்த வீரர்களில் ஒருவராக விளங்கிய எசிபியோ பிளாக் பந்தர் என்று . இரசிகர்களால் செல்லமாக அழைக்கப்பட்டவர்.

1966ஆம் ஆண்டு உலக கோப்பை காற்பந்து போட்டியில் அதிக கோல்கள் (9 கோல்) அடித்தவர் இவர் தான். அந்த உலக கோப்பையில் போர்ச்சுகல் மூன்றாவது இடத்தை பிடித்தது.போர்ச்சுகல் அணிக்காக 64 சர்வதேச போட்டிகளில் பங்கேற்று 41 கோல்கள் அடித்துள்ளார். மற்ற லீக் போட்டிகளையும் சேர்த்து அவர் தனது வாழ்க்கையில் 743 தொழில்முறை ஆட்டங்களில் விளையாடி 733 கோல்களை பதிவு செய்துள்ளார்.

எசிபியோவின் மறைவையொட்டி போர்ச்சுகலில் மூன்று நாள் துக்கம் கடைபிடிக்கப்படும் என்றும், தேசிய கொடி அரைகம்பத்தில் பறக்கவிடப்படும் என்றும் அந்த நாட்டு அரசு அறிவித்துள்ளது. காற்பந்து உலகம் ஒரு ஜாம்பவானை இழந்து விட்டதாக சர்வதேச கால்பந்து சம்மேளன தலைவர் செப் பிளாட்டர் விடுத்துள்ள இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

## ஆசியக்கிண்ண கிரிக்கட்டிலிருந்து பாகிஸ்தான் விலகலா?




பங்களாதேஷில் வரும் பெப்ரவரி 25முதல் மார்ச் 08 வரை நடைபெற உள்ள ஆசிய கிண்ண கிரிக்கெட் போட்டிகளில் இருந்து பாகிஸ்தான் விலகப் போவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

தற்போது வங்கதேசத்தில் அரசி யல் ஸ்திரமற்ற சூழ்நிலை நிலவு வதால், ஆசிய மற்றும் டுவென்டி- 20 உலக கிண்ண போட்டிகள் மாற்றம் செய்யப்படலாம் என தகவல்கள் வெளியானது. ஆனால் 4ஆம் திகதி நடந்த ஆசிய கிரிக்கெட் கவுன்சில் கூட்டத்தில், போட்டிகள் திட்டமிட்டபடி பங்களாதேஷில்தான் நடைபெறும் என்றும், அதில் எவ்வித மாற்றமும் இல்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

மேலும் இந்தியா, பாகிஸ்தான், இலங்கை, பங்களாதேஷ் ஆகிய அணிகளுடன் 5ஆவது நாடாக ஆப்கானிஸ்தானும் விளையாட உள்ளது. இந்நிலையில் பாகிஸ்தான் ஆசிய கிண்ண போட்டியில் இருந்து விலகலாம் என்று தெரிகிறது. அங்குள்ள நிலமைகள்தான் இதற்கு காரணம் என பாகிஸ்தான் கிரிக்கெட் வாரியத்தின் இடைக்கால தலைவர் நஜம் சேதி தெரிவித்துள்ளார்.

## ஐ.சி.சி பட்டியலில் தொடர்ந்தும் தென்னாபிரிக்கா முதலிடத்தில்




ஆஷஸ் டெஸ்ட் கிரிக்கெட் தொட ரில் முடிவடைந்ததை தொடர்ந்து, ஐ.சி.சி டெஸ்ட் தரவரிசைப் பட்டியலை வெளியிட்டுள்ளது. இப்பட்டியலில் 133 புள்ளிகள் பெற்று முதலிடத்தில் தென்னாபிரிக்கா அணி உள்ளது.

117 புள்ளிகளுடன் இந்திய அணி இரண்டாம் இடத்திலும், 111 புள்ளிகளுடன் அவுஸ்திரேலியா அணி மூன்றாம் இடத்திலும் உள்ளது. ஆஷஸ் தொடரில் 5 டெஸ்டிலும் தோற்றதால் இங்கிலாந்து 107 புள்ளிகளுடன் 4ஆவது இடத்துக்கு பின்தங்கியது.

பாகிஸ்தான் (102 புள்ளிகள்) 5ஆவது இடத்திலும், இலங்கை 6ஆவது இடத்திலும், மேற்கிந்திய தீவுகள் 7ஆவது இடத்திலும், நியூசிலாந்து 8ஆவது இடத்திலும், சிம்பாப்வே 9ஆவது இடத்திலும், பங்களாதேஷ் கடைசி இடத்திலும் உள்ளன.

## ரொனால்டோவுக்கு இளவரசர் ஹென்றி விருது



போர்த்துகலின் நட்சத் திர கால்பந்து வீரர் கிறிஸ்டியானோ ரொனால்டோ அந்நாட்டின் உய ரிய விருதான "ஓடர் ஒப் இளவரசர் ஹென்றி" விருதை பெறவுள்ளார்.

அந்நாட்டின் ஜனாதிபதி அனிபல் கவாகோ சில்வா இவ்விருதை ரொனா ல்டோ வுக்கு வழங்கவுள்ளதாக தெரிவிக்கப் பட்டுள்ளது.

28 வயதான கிறிஸ்டியானோ ரொனா ல்டோ, போர்த்துக்கலின் தேசிய அடை யாளமாக மதிக்கப்படுவதாக தெரிவித் துள்ள அந்நாட்டு அரசாங்கம் அவர் கால்பந்து விளையாட்டின் மூலம் நாட்டை உலகில் பிரதிநிதித்துவப்படுத் துவதாக குறிப்பிட்டுள்ளது.

ரொனால்டோ ரியல் மாட்ரிட் அணிக்காக கிளப் போட்டிகளில் விளையாடிவருகின்றமை குறிப் பிடத்தக்கது.

# உலகச் செய்திகள்

WORLD WATCH

## நவீன ரக ஆயுதங்கள் வழங்கும் அமெரிக்கா



ஈராக்கிற்கு இராணுவ உபகரணங்களை துரிதமாக வழங்க அமெரிக்கா நடவடிக்கை எடுத்துள்ளது. ஈராக்கில் கிளர்ச்சியாளர்களின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளை மீட்பதற்காக அரச துருப்பினருக்கு உதவும் நோக்கில் அமெரிக்கா யுத்த உபகரணங்களை வழங்கவுள்ளது.

இன்னும் சில தினங்களில் இலக்குகளை தாக்கி அழிக்கும் வல்லமை கொண்ட நவீனரக ஆயுதங்கள் ஈராக்கிற்கு வழங்கப்படும் என்று வெள்ளை மாளிகை குறிப்பிட்டுள்ளது. ஃபளுஜா நகர் ஏற்கனவே கிளர்ச்சியாளர்களின் கட்டுப்பாட்டில் உள்ள நிலையில் அன்பர் பகுதியில் தாக்குதல்கள் தீவிரடைந்துவருகின்றன.

அல்கைதா இயக்கத்துடன் தொடர்புடைய கிளர்ச்சிக்குழுவே ஈராக் அரசாங்கத்துக்கு எதிரான போராட்டத்தை மேற்கொண்டு வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

## ரஷ்யாவில் பயங்கரவாதிகளின் அச்சுறுத்தல்



ரஷ்யாவில் நடைபெறவுள்ள குளிர்கால ஒலிம்பிக் போட்டிகளுக்கு பயங்கரவாதிகள் இடையூறு விளைவிக்கலாம் என அந்நாட்டு புலனாய்வுத்துறை தெரிவித்துள்ளது. இதையடுத்து போட்டிகள் நடைபெறும் இடங்களில் பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டுள்ளன.

30 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொலிஸார் அங்கு குவிக்கப்பட்டுள்ளனர். இந்நிலையில் செச்னிய பயங்கரவாதிகள் குழுவின் தலைவர் டொக்கு உமா ரோவ் குளிர்கால ஒலிம்பிக்ஸ் போட்டிகளுக்கு எதிராக செயல்பட போராளிகளுக்கு அழைப்புவிடுத்ததாக அறிவிக்கப்படுகிறது.

## மோசடி வழக்கில் சிக்கியுள்ள இளவரசி



வரிஏய்ப்பு மற்றும் பண மோசடியில் ஈடுபட்டதாக ஸ்பெயின் இளவரசி மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஸ்பெயின் நாட்டின் இளவரசி இன்பேண்டா கிறிஸ்டினா(வயது 48), இவரது கணவர் இனாக்கி உர்டங்கரின். தன் கணவனின் வியாபார நிறுவனங்களை கவனித்து வந்த இவர், வியாபார நிறுவனங்களின் கணக்கு வழக்குகளில் மோசடி செய்து வரி ஏய்ப்பில் ஈடுபட்டதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது. இந்நிலையில் இவரின் கணவர் கடந்தாண்டு அறக்கட்டளைக்கு வழங்கப்பட்ட நிதியை அபகரித்துக் கொண்டு தலைமறைவாகி விட்டார்.

இவ்வழக்கை விசாரித்த நீதிபதி ஜோஸ், இளவரசியின் கணவரின் நிறுவனத்தில் இளவரசியும் பங்குதராராக இருந்து ஊழலுக்கு உடந்தையாய் இருந்துள்ளார். எனவே வரும் மார்ச் 8ஆம் திகதி இளவரசி பால்மா டி மல்லோர்கா நீதிமன்றத்தில் ஆஜராகி விளக்கமளிக்க வேண்டும் என உத்தரவிட்டுள்ளார்.மேலும் அரச குடும்பத்தை சார்ந்த ஒருவர் நீதிமன்றத்தில் ஆஜராவது இதுவே முதல் முறை என்பது குறிப்பிடத்தக்கது.


## பூமிக்கு அருகே சுற்றிவரும் மிக அபாயகரமான விண்பாறை



விண்வெளியை பற்றி ஆராய நாசா ஏவிய நியோவைஸ் என்ற செயற்கைகோள் பூமியை சுற்றிவந்து விண்வெளியை பற்றிய அரிய புகைப்படங்களை அனுப்பி வருகிறது. இது, கடந்த மாதம் 29ஆம் திகதி அன்று பூமியில் இருந்து 43 மில்லியன் மைலுக்கு அப்பால் சுற்றிவரும் விண்பாறை பற்றிய புகைப்படத்தை அனுப்பி வைத்துள்ளது. 2013 ஒய்.பி. 139 என்றழைக்கப்படும் இந்த விண்பாறையானது நிலையான நட்சத்திரங்களின் பின்னணியில் நகர்ந்து செல்வதை இந்த விண்கலம் படம்பிடித்துள்ளது.

அரிசோனா பல்கலைக்கழகம் பயன்படுத்தும் விண்வெளியை படபிடிக்கும் டெலெஸ்கோப்பும் இந்த விண்பாறை சுற்றுவதை உறுதிப்படுத்தியுள்ளது. 650 மீட்டர் விட்டத்துடன் நிலக்கரி போன்று கருப்பாக இருக்கும் இந்த விண்பாறையின் அளவு, வெளிச்சம் மற்றும் நடவடிக்கைகள் குறித்து ஆராய முடியும். சூரியனை சுற்றிவரும் இந்த விண்பாறை மிக அபாயகரமானது என்று விண்பாறை மற்றும் வால் நட்சத்திரங்களை பற்றி ஆராயும் ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர்.

## நடுக்கடலில் 60 மணிநேரமாக போராடிய நபர்



தைவானில் கடலுக்குள் இழுத்துச் செல்லப்பட்ட நபர், 60 மணிநேரமாக போராடி உயிர் பிழைத்துள்ளார். தைவான் நாட்டை சேர்ந்த த் செங் லியேன், கடந்த 3ஆம் திகதி கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்தார்.

அப்போது பாரிய அலை ஒன்று எழுந்ததால், உள்ளே இழுத்துச் செல்லப்பட்டார். நீச்சல் தெரியாததால் திக்குமுக்காடிப் போனவர், அங்கு மிதந்து கொண்டிருந்த சவப்பெட்டியை பிடித்துக் கொண்டு 60 மணி நேரமாக போராடி உயிர் பிழைத்தார். ஆனால் அங்கு எப்படி சவப்பெட்டி வந்தது என்பது குறித்து யாரும் விவரிக்க மறுத்துள்ளனர்.

## முன்னாள் அழகி சுட்டுக்கொலை



கடந்த 2004ஆம் ஆண்டு வெனிசுலா நாட்டின் அழகியாக தேர்ந்தெடுக்கப்பட்டவர் மோனிகா ஸ்பியர் (29). அமெரிக்காவில் வசித்துவந்த அவர் நெடுந்தொடர் ஒன்றில் நடித்துவந்தார்.

இந்நிலையில் அவரது முன்னாள் கணவர் ஹென்றி பெர்ரி மற்றும் அவர்களது 5 வயது குழந்தையுடன் வெனிசுலாவில் ஓய்வெடுக்க வந்திருந்தனர். அவர்கள் மத்திய வெனிசுலாவில் உள்ள பியூர்ட்டோ காபெல்லோ மற்றும் வேலன்சியா நகருக்கிடையே நெடுஞ்சாலையில் காரில் வந்தபோது அவர்களை பின் தொடர்ந்து வந்த கொள்ளை கும்பல் ஒன்று சுட்டது. இதில் மோனிகாவும் அவரது முன்னாள் கணவர் ஹென்றியும் கொல்லப்பட்டனர்.

ஆனால், அவர்களது 5 வயது குழந்தை மட்டும் காலில் குண்டு காயத்துடன் உயிர்பிழைத்தது. வெனிசுலாவின் உயர் வழக்ககாக கருதப்படும் இக்கொலைச்சம்பவம் தென்னமெரிக்காவில் பரபரப்பாக பேசப்படுகிறது. உலகில் அதிகம் வன்முறை நடக்கும் நாடுகளில் ஒன்றான வெனிசுலாவில் இதுபோன்று சம்பவங்கள் அடிக்கடி நடப்பதாக அரசு மீது எதிர்கட்சிகள் குற்றம் சாட்டிவருகின்றன.

## ஜேர்மன் பிரதமருக்கு எலும்பு முறிவு



பனிச்சறுக்கில் ஈடுபட்டிந்த போது விபத்தில் சிக்கி கொண்ட ஜேர்மன் பிரதமர் ஏஞ்சலா மெர்க்கலுக்கு எலும்பு முறிவு ஏற்பட்டுள்ளதாக பிரதமரின் செய்தித் தொடர்பாளர் தெரிவித்துள்ளார்.

கிறிஸ்துமஸ் விடுமுறையில் இருந்தபோது ஜேர்மனி- சுவிட்சர்லாந்தின் என்காடின் பிராந்தியத்துக்கு இடைப்பட்ட பகுதியில் பனிச்சறுக்கில் ஈடுபட்டிருந்தார். அப்போது எதிர்பாராதவிதமாக திடீரென தவறி விழுந்ததில், இடுப்பில் காயம் ஏற்பட்டது. வலியால் துடித்த அவருக்கு முதலுதவி சிகிச்சை அளித்து பின்னர் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றனர்.

இடுப்பில் சிராய்ப்பு ஏற்பட்டதால் வலி ஏற்பட்டதாக முதலில் நினைத்தனர். ஆனால், பெர்லின் மருத்துவமனையில் பரிசோதனை செய்தபோது, இடுப்பெலும்பில் முறிவு ஏற்பட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. இதையடுத்து அவர் மூன்று வாரங்களுக்கு கட்டாயம் ஓய்வு எடுக்க வேண்டும் என்று மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

## மேற்கு அமெரிக்காவைத் தாக்கும் பனிப்புயல்



அமெரிக்காவின் வடபகுதி மற்றும் கனடாவில் வீசிய கடும் பனிப்புயல் தற்போது மத்திய மேற்கு அமெரிக்கா பகுதிகளில் வீசுகிறது. இதனால் அங்கு தட்பவெட்ப நிலை உறைநிலைக்குக் கீழாக மைனஸ் 31 டிகிரி செல்சியஸ் அளவுக்குச் சென்றுள்ளது.

மினியாபோலிஸ் பகுதியில் ஞாயிற்றுக் கிழமை மைனஸ் 18 டிகிரி செல்சியஸ் இருந்த தட்பவெட்ப நிலை, திங்கட்கிழமை மைனஸ் 31 டிகிரி செல்சியஸாகக் குறைந்தது. காற்றில் குளிரின் அளவு மைனஸ் 45 டிகிரி செல்சியஸாக அதிகரித்துள்ளது. ஒக்லஹோமா, டெக்ஸாஸ், இன்டியானா பகுதிகளிலும் மைனஸ் 40 டிகிரி செல்சியஸ் அளவுக்கு தட்பவெட்ப நிலை குறைந்தது. அலாபாமா, பால்டிமோர், ஜோர்ஜியா, மேரிலேண்ட் உள்ளிட்ட பகுதிகளிலும் கடும் குளிர் நிலவுகிறது. கடந்த 20 ஆண்டுகளில் பதிவான மிகக் கடும்குளிராக இது கருதப்படுகிறது.

இதனால், அமெரிக்காவின் மத்திய மேற்குப் பகுதி முழுவதும் பனியால் மூடப்பட்டுள்ளது. பெரும்பாலான இடங்களில் சாலைப் போக்குவரத்து முடங்கியுள்ளது. சுமார் 1.87 கோடி மக்கள் பனிப்புயலால் பாதிக்கப்பட்டுள்ளனர். அமெரிக்காவின் கிழக்கு, தெற்கு பகுதிகளிலும் கடுமையான குளிர் நிலவுகிறது. பெரும்பாலான பகுதிகளில் பள்ளி, குழந்தைகள் காப்பகங்கள் மூடப்பட்டுள்ளன. சாலைகளில் ஓரடி உயரத்துக்கும் அதிகமாக பனிபடிந்துள்ளது. கார்கள் உள்ளிட்ட வாகனங்கள் முற்றிலுமாக பனியால் மூடப்பட்டுள்ளன.







பாபு தையல் இயந்திரம் திருத்துமிடம்


சகல விதமான தையல் இயந்திரங்களும் தங்கள் இருப்பிடத்திற்கே வந்து திருத்திக் கொடுக்கப்படும்.

தொடர்புகளுக்கு :- 077 6906182

# விந்தை உலகம்

## வளரும் கற்கள்..

பொதுவாக கற்கள் வளருவதில்லை என்ற போதிலும் சில சமயங்களில் வளரும் கற்கள் தொடர்பான தகவல்கள் ஆதாரங்களோடு வெளிவருவதுண்டு. அதே போலவே தற்போதும் ரோமானிய நாட்டில் காணப்படும் வளரும் கற்கள் தொடர்பான புகைப்படங்களும் வீடியோவும் வெளியாகியுள்ளன. இது ஒரு கட்டுக்கதை என பலர் தெரிவித்துவரும் போதிலும் ரோமானியாவின் கோஸ்டெஸ்டி எனும் கிராமத்தில் காணப்படும் இக்கற்கள் தொடர்பாக ஜேர்மன் குழு ஒன்று ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ளது.





## வருடம் முழுவதும் மரதன் ஓடி சாதனை படைத்த தம்பதியர்

அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த Alan Murray (வயது 68) மற்றும் அவரது பாரியாரான Janette Murray-Wakelin (வயது 64) ஆகிய இருவரும் வருடம் முழுவதும் மரதன் ஓடி உலக சாதனை நிகழ்த்தியுள்ளனர். அதாவது இவர்கள் இருவரும் கடந்த 2013ம் ஆண்டில் ஒவ்வொரு நாளும் குறித்த நேரம் ஒதுக்கி மரதன் ஓடியுள்ளனர். இதன்படி தமது 366வது மரதனை அவர்கள் நிறைவு செய்யும்போது மொத்தமாக 15,000 கிலோ மீற்றர்கள் தூரத்திற்கு ஓடியிருந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.









தினப்புயல் வாசக,வர்த்தக பெருமக்களே...

பண்டிகை தினங்களை முன்னிட்டு விசேட
விலைக்கழிவுடன் வர்த்தக விளம்பரங்களை
பிரசுரித்துக்கொள்ள இன்றே முந்திக்கொள்ளுங்கள்

தினப்புயல்
6ம் ஒழுங்கை,கண்டி வீதி
தேக்கவத்தை, வவுனியா.

தொ.பே:024-2227558,
071-1850885




















இப்பத்திரிகை இலக்கம் 165A, குருமன்காட்டில் அமைந்துள்ள G.H அச்சகத்தில் அச்சிட்டு, தினப்புயல் நிறுவனத்தால் 12.01.2014 அன்று வெளியிடப்பட்டது.